தேவனுக்கே மகிமை

நீங்களும், உங்கள் குடும்பத்தாரும், சுகமாய் இருக்க இறைவன் இயேசு மகாராஜாவிடம் வேண்டிக்கொள்கின்றேன். இயேசப்பாவின் திருப்பெயரால் வாழ்த்துகிறோம்.

எனக்கன்பான சகோதர, சகோதரிகளே, உங்கள் விலை யில்ல நேரத்தில் இதைபடிக்கும் நேரத்தை நான் யாசகமாக கேட்கிறேன், தருவீர்களென்றும் நம்பி தொடர்கிறேன். நமக்கு நன்றாக தெரிந்த சில விஷயங்களை நாம் திரும்பவும் படிக்கும்போது வேறு புதிதான கருத்து வெளிப்படுவது இயல்புதான், அதன் அடிப்படையில் உங்களுக்கு தெரிந்தவைகளையே உங்களுடன் பேச விரும்புகின்றேன். ஆன்மீகம் என்ற வார்த்தை பூமியில் பிறந்த எல்லா மனிதனுக்கும் பிடித்த மான வார்த்தை, ஆன்மீகம் என்றால் என்ன என்று கேட்போமானால் அது இறைவழிபாடு என்றும், இறைவனிடம் கொண்டுபோய் சேர்க்கும் வழி என்றும், சுலபமாக சொல்லிவிடுவோம்.

ஆதியிலே மனிதன் நிலநடுக்கத்தையும், சுழற்காற்றை யும், வானத்திலிருந்து விழும் எரி கற்களையும், விழுந்த கல்மழையையும், இடியையும், மின்னலையும், பேரிடர்களையும், கண்டு இது இறைவனின் பலத்த கை என்றும், கண் காண்கின்றவைகள் எல்லாம் இறைவனின் கை உண்டாக்கியதென்றும்,மனிதன் இறுதியில் இயற்கை யெய்துகிறான், அதாவது இறைவனின் கையில் போய் சேருகிறான் என்றும், உணர்ந்துவைத்திருந்த தமிழன் பலநேரங்களில் **இறைவனின் கை** என்ற வார்த்தையை உபயோகப் படுத்தினான், உலகத்தில் தலைசிறந்த நாகரீக மக்களாக விளங்கிய எகிப்தியர்கள் இறைவனுக்கு பிடிக்காத அகந்தை கொண்டு, இஸ்ரவேலர்களை அடிமைகளாக்கி அவர்களுக்கு தங்கள் உயிரையே கசப்பாக நினைக்கும்படி கொடுமையாக நடத்தினார்கள், வேதனையில் அவர்கள் இறைவனை நோக்கி கூக்குரலிட்டார்கள், கர்த்தர் அந்த ஏழைகளுக்கு செவி கொடுத்தார், அவர்களுக்கு நியாயம் செய்ய சித்தமானார் எகிப்தை அழிக்க முடிவெடுத்தார், எகிப்து தேசத்தை பத்து வாதைகளால் வாதித்தார், பாரோனும், அவன் மந்திரிகளும், ஞானிகளும், எகிப்தியர்களும் **இது கர்த்தரின் கரமாக இருக்கிறத**, நாம் என்ன செய்ய முடியும் என்று கதறினார்கள். இப்படி கர்த்தரின் கரம் என்ற வார்த்தை நிறைய இடங்களில் வேத புத்தகத்தில் இருக்கிறது, இப்படி மிகசிறந்த நாகரீகத்தில் வாழ்ந்த தமிழர்கள் பல சூழ்நிலைகளில் **இறைவனின் கை** என்ற வார்த்தையை நடைமுறையிலும், இலக்கிய படைப்புக்களிலும் பயன்படுத்தியிருப்பதை காணலாம். நாளடவில் இந்த வார்த்தை சொல்வழக்கில் சுருக்கமடைந்து **இறை கை** என்றாகி பிற்காலத்தில் **இயற்கை** என்றானது. அதேபோல் **ஆன்மா மிகும்** என்ற வார்த்தையிலிருந்து மாற்றம் அடைந்த வார்த்தைதான் **ஆன்மீகம்** என்று சொல்வழக்கானது. நமது சரீரத்தின் முழு இடத்தையும் நம் ஆன்மா நிறப்பி இருப்பதால் இறைவனை வணங்கும் போது நாம் மெய்மறந்து போகிறோம். நாம் யாராக இருந்தாலும் இறைவனை வணங்கும்போது தானாகவே நம் கண்கள் மூடிக்கொள்ளும் எதிரில் எந்த விக்கிரகமோ அல்லது யார்இருந்தாலும் சரி முழுஉள்ளத்தோடு வணங்கும் பக்தனுக்கு எந்த உருவமும் தோண்றாது சிந்தையில் அமைதியும், பரவசமும் மாத்திரம்தோண்றும் இது பக்தியில் வரும் ஆனந்தம் மாத்திரமல்ல, நம்மை படைத்தவரின் ஆவி ஒவ்வொரு மனிதனுக்குள் இருப்பதினால், இறைவன் மீது மனிதனுக்கு இருக்கும் ஆசை தானாக வெளிப்படும் விதம் தான் அந்த உணர்வு, அதே ஆசையில் நிலைத்து நின்று அதையே யோசித்து, தனித்திருந்து, விழித்திருந்து, பசித்திருந்து, தன்னையும் மறந்து, உலகத்தை மறந்து, உறவுகளை மறந்து, தன் குடும்பத்தையும் மறந்து, உணவையும் மறந்து இறைவனோடுவாழும் உண்மை பக்தனின் உடல் வாடிப்போகும். இப்படிப்பட்ட மகான்கள் இறைவனோடு எப்போதும் **ஆன்மாவிலே** மகிழ்வதால் அவர்களின் **ஆன்மா புஷ்டியாகி சரீரத்தை மிஞ்சி வெளியே மிகுந்து காணப்படும்** இந்த நிகழ்வுக்குத்தான் **ஆன்மா மிகுதல்** என்று சொல்லுவோம், இதை ஒளிவட்டம் என்றும் கற்பணையாக சொல்வார்கள். நாம் மனிதனின் ஆன்மாக்களை எப்படி கண்களால் காண முடியாதோ சரீரத்தைசுற்றி மிஞ்ஜி வெளிப்பட்ட ஆன்ம ஒளியையும் நம் கண்களால் காண முடியாது, அவர்களின் சரீரத்தின் அருகே தீயசக்திகள் நெருங்கமுடியாது, அவர்களின் நடத்தையிலும், வார்த்தையிலும் பரிசுத்த வல்லமை தெரியும், எப்போதும் அவர்களை சுற்றி சாந்தம் குடியிருக்கும், அப்படிபட்டவர்களின் முகம் மிகவும் பிரகாசிக்கும், இவைகள்தான் ஆன்மா மிகுந்தவர்களின் அடையாளம். இப்படி இல்லாதவர்கள் போலியான ஆன்மீக வாதிகள். மேலும் ஆன்மா மிகுதலுக்கான ஆத்மார்த்த முயற்சிகளைத்தான் நாம் ஆன்மீக காரியங்கள் என்று சொல்லுகின்றோம். வெளியரங்கமான சடங்குகள் அப்பாவி மக்களை குழப்பும் காரியங்களாக இருக்கிறது. நாம் வாழும் இந்த உலகத்தில் அநேக நாடுகள், அநேக மொழிகள், அநேக கலாச்சாரங்கள், அநேக மதங்கள், அநேக தெய்வங்கள் இருப்பதும் நமக்குத்தெரியும். உலகின் பெரும்பாலான தெய்வ வழிப்பாட்டு முறைகள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றது, சூரியனை ஒரு ஆண் தெய்வமாக எத்தனையோ நாடுகளில் வழிபடுகிறார்கள் அறுவடைப் பண்டிகை எல்லா நாடுகளிலும் சூரியனுக்கு நன்றி சொல்லும் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது அதேபோல பெண் தேவதைகள், சிங்க முகமும் மனித சரீரமும், மனிதமுகமும் சிங்கத்தின் சரீரமும், பாம்புகள், மீன்கள், கழுகுகள், பன்றிகள், மாடுகள், குரங்குகள், மனிதகுதிரைவடிவம், மின்னல், மழை, காற்று, போன்ற ஒரேமாதிரியான தெய்வங்கள் அநேக விதங்களில், அநேக நாடுகளில் வணங்கப்படுகின்றது. ஆனால் அதினதின் கதைகள் தேசத்திற்கு தேசம் வேறுபட்டதாக இருக்கின்றது. இவைகளை இண்டர்நெட்டில் தேடினா லும் தெரிந்து கொள்ளலாம். உயிர் பலிகள், தீ மிதிப்பது, யாகங்கள் நடத்துவது, அலகு குத்துவது, சரீரத்தை கிழித்துக் கொண்டு ரத்தம் வழிய வழிபடுவது, தேர் இழுப்பது, படையல் இடுவது, மதுபானம் படைத்து வழிபடுவது, விளக்குகள் ஏற்றுதல், தூபம் காட்டுதல், மந்திரம்ஓதுதல் என்று எல்லா வழிபாட்டுமுறை களையும் **ஆன்மீகம்** என்ற வார்தையில் அடக்கி அப்படியே போதிக்கப்பட்டுவிட்டது. மனிதர்கள் தங்களை படைத்தவருக்கு பயப்படும் பயத்தையும் பக்தியையும், விக்கிரகங்களுக்கு நேராக திசை திருப்ப பட்டு விட்டது. நாளடைவில் வியாபார நோக்கத் தோடும், மக்களின் பிழைப்பின் நோக்கமாகவும், தங்களின் வீடுகளையும், தங்கள் ஆடைகளையும், தங்கள் உறவுகளையும், புதுப்பித்துக்கொள்ள சிறந்த வாய்புக்களாகவும், திருவிழாக்கள், பண்டிகைகள்

என்று உருவாக்கப்பட்டதால் தெய்வங்களும் அதிகமாகி கொண்டே போனது நாம் அதிலேயே திருப்தியடைந்தும் விட்டோம். பிரம்மாண்டமான மிரளவைக்கும் கோபுரங்களும், மண்டபங்களும் நம்மை வசியப்படுத்தி **சிருஷ்டிக்கும், சிருஷ்டிகருக்கும்** இடையே இருக்கும் வித்தியாசத்தை யோசிக்ககூட வாய்ப்பே இல்லாமல் செய்துவிட்டது. கண்களால் காண்பதையே நம்பமுடியும் வணங்கமுடியும், கண்களால் காண முடியாதவைகள் நம்ப முடியாதவைகள் என்ற கருத்தினை ஆதியிலேயே சுமேரியா, பாபிலோன், மெசப்பத்தோமியா, கிரேக்கம், எகிப்து, சீனா, சிந்து போன்ற உலகின் முதல் நாகரீகங் கள் என்ற வரலாற்று பெருமைகொண்ட நாடுகளில் வாழ்ந்த மக்கள் சட்டரீதியாகவும், அரசாணைகலாளும், பிரம்மாண்டமான விக்கிரக ஆராதணைகளாலும், உறுதி செய்தார்கள், இதை சத்திய வேதாகமத்தை படிக்கும் போதும் தெரிந்து கொள்ளலாம், மேலும் உலக வரலாற்றிலும் தெரிந்து கொள்ளலாம்.
நாம் பெற்றபிள்ளை நம்மை அப்பா என்று கூப்பிடாமல், பக்கத்து வீட்டுக்காரனை அப்பா என்று கூப்பிட்டாள் நமக்கே கோபம் வந்து பிள்ளையை அடித்து நான்தானடா உனக்கு அப்பா என்று சொல்லித்தர மாட்டோமா, இப்படித்தான் விக்கிரகங்களுக்கும் கட்டுகதைகளுக்கும் உலகத்திற்கே முதற்பிறப்பிடங் களாக இருந்த எகிப்து, பாபிலோன், ரோமாபுரி, கிரேக்கம், அசீரியா போன்ற தேசங்கள் சிதறடிக்கப் பட்டது. இஸ்ரவேல் தேசமும் கூட தேவகோபத்தினால் கவிழ்த்து போடப்பட்டது, இஸ்ரவேல் தேசம் பலநூறாண்டுகளாக தேவ கோபத்தினால் இல்லாமலே போனது.

சிருஷ்டிகரை வணங்காமல் அவராள் சிருஷ்டிக்கப் பட்டவைகளை வணங்கினால் சகலத்தையும் சிருஷ்டித்த வருக்கு கோபம்வராதா, ராஜாவை வணங்காமல் அவன் எதிரிலேயே மந்திரியை வணங்கினால் ராஜா நம்மையும் மந்திரியையும் சும்மா விடுவானா, நமக்கு தலைபோகும் மந்திரிக்கு பதவிபோகும் அல்லவா, கோப உணர்வை நமக்குள் படைத்தவருக்கு கோபப்பட தெரியாதா, அடித்து கற்றுக்கொடுக்கும் அறிவை நமக்குள் வைத்த வருக்கு நம்மை அடித்து கற்றுக்கொடுக்க தெரியாதா, ஆமாம் அவர் கோபம் அவருக்குள் இமைப்பொழுதா னாலும், அந்த இமைப் பொழுதில் உலகம் சூழ்ந்த உணவு பஞ்சமும்,கொல்லைநோயும், பூகம்பமும், சுனாமியுமல்லவா, அவர் கோபத்தை நமக்கு வெளிப் படுத்தி விடுகிறது. அதற்குப்பின்வரும் செழிப்பும், சமாதானமும், அமைதியும், அவருடைய மனதுருக்கம் என்று நம்மை உணரவைக்கிறது. அவரிடம் நம்மை தாழ்த்தி நாம் மண்ணிப்பு கேட்பதே இல்லை, நமது மேட்டிமையினால் அவருடைய தயவும், இரக்கமும், அன்பும், யுகாயுகமாக நம்முடன் இருப்பதை நம்மால் உணரமுடிவதில்லை, இதையெல்லாம் நமக்கு உணர்த்தவே அவரே தன் மகிமையின் ரூபமாக, தன் ஒரேபேரான குமாரனாக, நாம் காணும்படியாக, அவர்வார்த்தையை நாம் கேட்டு உணரும்படியாக, இந்த பூமிக்கு நம்மைப் போல அவரே மனிதனாகவந்தார்.

ஆதியிலே வார்த்தை இருந்தது அந்தவார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்தவார்த்தை தேவனாயிருந்தது. [யோவான் 1:1] அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். [யோவான் 1:2] சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை [யோவான் 1:3]

ஏன் நாம் சேனைகளின் கர்த்தரை பார்க்கமுடியாதா ஏன் அவர் தன் குமாரனாக வெளிப்பட வேண்டும்,என்று கேட்பவர்களுக்கு இதோவேதாகமத்தில் மனிதர்களோடு கர்த்தரே பேசின நிகழ்வு.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தருக்கு சொன்னான். [யாத்திராகமம் 19:9]

மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும், மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். [யாத்திராகமம் 19: 16]

ஜனங்கள் எல்லாரும் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளச் சத்தத்தையும் மலை புகைகிறதையும் கண்டார்கள், அதைக்கண்டு ஜனங்கள் பின்வாங்கி, தூரத்திலே நின்று [யாத்திராகமம் 20:18]

மோசேயை நோக்கி நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம், தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள் [யாத்திராகமம் 20:19]

மோசே ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள் உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும் தேவன் எழுந்தருளினார் என்றான். [யாத்திராகமம் 20:20]

இப்படி முப்பதுலட்சம் மக்கள் கர்த்தரின் வார்த்தையையும், அவருடைய மகிமையின் சாயலையும்,நேராககண்ட வரலாறு உலகில் எந்த ஜனத்திற்கும் இல்லை. ஒருவேலை தனிப்பட்டமுறையில் பரிசுத்தவான்களி டத்தில் கர்த்தர் பேசி இருக்கலாம். எந்த வின்ஞானத்தாலும், முழுமையாக காண முடியாத வானங்களை படைத்து, பிரபஞ்ஜங்களை உண்டாக்கி, அவைகளுக்கு கருந்துளைகளை வாசல்கலாக வைத்து, பிரபஞ்ஜத்தில் நட்சத்திரமண்டலங்கள், தூசி மண்ட லங்கள், அணுமண்டலங்கள், மின் காந்த மண்ட லங்கள், வானத்து அக்கினி மண்டலங்கள், தண்ணீர் மண்டலங்கள், ஜீவ சுவாச மண்டலங்கள், வகை வகை யான வாயு மண்டலங்கள்,காந்த மண்டலங்கள், உயிரின மண்டலங்கள், தாவர இன மண்டலங்கள், விலங்கின மண்டலங்கள், உலோக மண்டலங்கள், அமில மண்டலங்கள், என்று படைத்து

அவைகளுக்கான தேவ தூதுவர்களையும் படைத்து, அதிகாரம் கொடுத்து, பரமண்டல இராஜ்ஜியத்தை ஆளுகை செய்துகொண்டு வருகின்றாரே அவர்தான் நம் சேனைகளின் கர்த்தர். அவர் எப்போதோ ஒருகாலத்தில் நம்மை ஆண்டவரில்லை, யுகா யுகங்களாக இப் பிரபஞ்ஜத்தை ஆலுகைசெய்கிறவர், மனித சிறு பூச்சிக்களாகிய நம்மையும் படைத்து ஆண்டுக்கொண்டிருப்பவர்தான் சர்வசேனைகளின் கர்த்தர். அவர் ராஜ்ஜியத்திற்கு முடிவிராது.

ரிக்வேதம் காட்டும் உருவமில்லா தேவனும், யஜூர் வேதம் சொல்லும் வழிபாட்டிற்குரிய தேவனும், எகிப்தியர்கள் கண்ட பலத்த கரங்களுடைய தேவனும், ரோமர்கள் வணங்கின அறியப்படாத தேவனுமாக இருப்பவர் தான் நம் சேனைகளின் கர்த்தர்.

இந்த உண்மையான இறைவனுக்கு நாம் எப்படிப்பட்ட உருவத்தை காட்டமுடியும், யானையின் மேல் ஊர்ந்து செல்லும் எறும்பிற்கு யானையை முழுமையாக பார்க்க முடியாதல்லவா மனித சிறுபூச்சிகளாகிய நம் நிலையும் அப்படித்தான். அவரோ வானங்கள்கொள்ளாத சிங்காசனத்தில் வீற்றிருப்பவர், நாமோ விமானத்திலி ருந்து பார்தால் நம் கண்களால் காணமுடியாத வைரஸ்களைப் போல இருக்கிறோம், நாம் எப்படி அவரை முழுமையாக பார்க்கமுடியும், நம் கைகளினால் அவர் வாசம்செய்ய எப்படிப்பட்ட பிரம்மாண்டமான ஆலயத்தை கட்ட முடியும், முடியாதல்லவா இதோ இதைப்பற்றி வேதத்தில் கர்த்தருடைய வார்த்தை.

சாலொமோனே அவருக்கு ஆலயத்தைக் கட்டினான் [அப்போஸ்தலர் 7:47]

ஆகிலும் உன்னதமானவர், கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார் [அப்போஸ்தலர் 7:48]

வானம் எனக்கு சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்: நான் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எது [அப்போஸ்தலர் 7:49]

இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்கவில்லையா என்று கர்த்தர் உரைக்கிறார்என்று தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறார் [அப்போஸ்தலர் 7:50]

பூமியின் மேல் பலலட்சம் தூண்களைவைத்து கட்டிய மண்டபத்துடன் தேவாலயத்தை மனிதன் கட்டினாலும் அதின் மேல் கர்த்தரின் நிலைப்பாடு வேத வசனத்தில் சொன்னபடித்தானே இருக்கின்றது, ஆமாம் மகா பரிசுத்த வானாகிய வல்லளார் உயர் திரு இராமலிங்க அடிகளார் திரு வருட்பா ஆறாம் திருமறையில் அருட்பெரும் ஜோதியும் தனிப்பெரும் கருணையுமாக இறைவன் இருப்பதாக கண்டறிந்தார், தான் இயற்றிய ஐந்து திருமறையும் தவறு என்றும், திருவருட்பா ஆறாம் திருமறையில் சொன்னது தான் சத்தியமென்று அவர் சொல்வது திருவருட்பா ஆறாம் திருமறையை படித்தவர்களுக்கு விளங்கும், ரத்தசாட்சியாக பரலோகம் சென்ற பரிசுத்தவானால் வெளிப்படுத்தப் பட்டவர்தான் ஒருவரும் கிட்ட சேரமுடியாத ஒளியாக வாசம் செய்பவர். அவர்தான் நம் சேனைகளின் கர்த்தர். பொற்கோவிலுக்கென்று பெற்று சீக்கிய சாதுவாக வேண்டுமென்றே செல்வத்திலும், கீதா உபதேசத்திலும் குழந்தைபருவ முதல் தன் அன்பு தாயால் வளர்க்கப்பட்ட இளைஞர் தான் பரிசுத்தவானாகிய சாதுசுந்தர்சிங் அய்யா, அவர் தேடி அலைந்து தன் அன்புமிகுந்த தாய்க்கு பதிலாக கண்டறிந்த தேவன் தான் நம் சேனைகளின் கர்த்தர். இமயமலையின் பனிகுகை ஒன்றில் சாது சுந்தர் சிங் அய்யா சந்தித்த மகா மகரிஷி யும் கண்டு உணர்ந்து வணங்கிய ஒரே தேவன் தான் நம் சேனைகளின் கர்த்தர். இன்னும் உலகமெங்கும் எத்தனையோகோடி பரிசுத்தவான்கள் கண்டு தரிசித்த ஒரேதேவன் தான் நம் சேனைகளின் கர்த்தர். இதயம் நொறுங்குண்டு கதறிக் கண்ணீரோடு கூப்பிட்ட கோடான கோடி ஏழைகள் கண்டு தரிசித்த கர்த்தர் தான் வேதாகமம் போற்றும் சர்வ சேனைகளின் கர்த்தர். ஆத்ம கண்களால் பாவியாகிய நானும் கண்ட தெய்வம் தான் நம் சேனைகளின் கர்த்தராகிய இயேசப்பா, இதயத்தில் சுத்தமுள்ள தரித்திரர்களும் கண்டு தரிசித்த சாட்சிகளும் உன்டு, பரிசுத்தவான்களின் சாட்சிகளும் கோடான கோடி உன்டு. முழு இருதயத் தோடு தேடாத ஒருவராளும் சுத்தஇருதயம் இல்லாத ஒருவராளும் கண்டறியப் படாத தேவன் தான் நம் சேனைகளின் கர்த்தர். கர்த்தர் இஸ்ரவேலருக்கு மட்டுமான இறைவனல்ல, உலகமனிதர்கள் யாவருக்கும் ஒரே இறைவன்தான் அவர்தான் சர்வ சேனைகளின் கர்த்தர்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் மனுஷன் ஜீவாத்துமாவானான் [ஆதியாகமம் 2:7]

ஒரு தாயின் கருவில் உருவாகும் குழந்தை தன்தாயின் சுவாசக்குழாய்,தாயின்இரத்குழாய்,தாயின்கழிவுப்பாதைகுழாயுடன் தொப்புல்கொடிமூலமாக இணைக்கப்பட்டு உயிருள்ள குழந்தையாக இருக்கும் பத்துமாதத்தில் உருவாகிய குழந்தை தாயின்கருப்பையை விட்டு வெளியே வந்ததும் தொப்புள்கொடி துண்டிக்கப்படுகி றது அந்த நாழிகைகளில் குழந்தை ஒரு சவத்தைப்போல இருக்கின்றது. பிறகுதான் அந்த சரீரத்திற்குரிய ஆத்மா கொடுக்கப்படுகிறது அதின் இரத்தத்தில் உயிர் இருப்பதினால் குழந்தை அழுகிறது, இந்த நிகழ்வு மருத்துவத்தில் இன்றும் கண்டரியப்படாத நிகழ்வு இதனால்தான் தமிழன் பிறக்கின்ற சவம் என்ற பொருள் தோன்ற பிறசவம் என்று அழைக்கின்றான். மனிதன் சேனைகளின் கர்த்தரின் கரத்தால் எப்படி உருவாக்கப் பட்டிருக்கிறான் என்று தெறிந்துக்கொள்ள, மனித உடற்கூறு அறிவு இயல் ஆய்வாளர்கள் இப்போதும் தொடர்ந்து ஆய்வுகளை நடத்திக்கொண்டுதான் இருக்கின்றார்கள்,ஆச்சரியத்தையும், அதிசயத்தையும், கண்டறிந்தாலும் இன்னும் மனிதனுக்குள் இருக்கும் அதிசயங்களும், பிரம்மிப்புக்களின் ஆய்வுகளும், தொடர்ந்து

கொண்டுத்தான் இருக்கின்றது, அதற்கு முடிவிராது. ஆதாம் சகல சிருஷ்டிப்பிற்கும்பெரியவனாக எல்லா உயிர்களுக்கும் பெயர் வைத்து பேசிமகிழ்ந்தான்.

ஆதாமுக்கோ ஏற்றதுனை இன்னும் காணப்படவில்லை [ஆதியாகமம் 2:20]

அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந் தான், அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார் [ஆதியாகமம் 2:21]

நான் எக்ஸ்ரே டிப்ளாமா டிரெயினிங் எடுக்கும்போது ஆண் ஒருவரின் எக்ஸ்ரேவிற்கு பெண் பெயரும் பெண் ஒருவரின் எக்ஸ்ரேவிற்கு ஆண் பெயரும் மாற்றி எழுதிவிட்டேன், பெயர் எழுதின துன்டுகாகிதம் டார்க்ரூமில் விழுந்துவிட்டதால் அந்த தவறு நடந்துவிட்டது, அதை டாக்டர் சி,ஆர், பாபு எழும்பூர் மகப்பேரு மருத்துவ மணையின் டாக்டர் அவர்தான் எங்களுக்கு கற்பிப்பவர். என்னைபார்த்து என்ன நடந்தது நான் சொல்லட்டுமா என்று நடந்ததை நேரில்பார்த்தவர் போல சொல்லி விட்டு, இந்த ஆண் நன்றாக இருக்கின்றான், அணுக்கு பெண் பெயர் எழுதியிருக்கிறாய், இந்த பெண்ணுக்கு டீ.பி. வியாதி அதிகமாக இருக்கிறது இதற்கு அந்த ஆண்பெயரை எழுதிவைத்திருக்கிறாய் சிகிச்சைமாற்றி கொடுக்கப் பட்டால் அவர்கள் கதி என்னாவது என்று திட்டினார், அப்போது எக்ஸ்ரேவில் ஆண், பெண் எப்படிசார் கண்டுபிடிச்சீங்க என்று நான் கேட்டபோது எங்கள் அனைவருக்கும் அவர் கற்றுத்தது, ஆண்விலா எலும்பில் கடைசியில் ஒன்று உடைக்கப்பட்டிருப்பதை காட்டி இந்த இடம் ஆதாமின் போன் என்று மெடிக்கல் புத்தகத்தில் மார்பெலும்புக்கூட்டு படத்தில் குறிப்படப் பட்டிருப்பதை காட்டி இது ஆணுடையது, கிறிஸ்தவர்களின் பைபிலில்மட்டும் தான் இப்படி சொல்லப்பட்டிருக்கிறது,மேலும் பெண் விலாஎலும்புகள் முழுமையாக இருப்பதையும் எங்களுக்கு காட்டி இது பெண்ணுடையது என்று கற்றுக் கொடுத்ததிலிருந்து கற்றுக்கொண்டோம். டார்வின் கொள்கை கற்பணையானதும் யூகத்தின் அடிப்படையிலானது என்றும் அன்று கற்றுக்கொடுத்தார்.

மனிதனை மனிதனாகத்தான் சேனைகளின் கர்த்தர் தம் கரங்களினால் படைத்தார் என்று வேதத்தில் சொல் லப்பட்டதற்கு, உடலியலின் மருத்துவ ஆதாரம் இது. தேவனாகிய சிருஷ்டி கர்த்தரை தனிப்படுத்தி அறிவியலை ஆராயவே முடியாதென்று அறிவியலார் திரு ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் உறுதிபடுத்தியிருக்கிறார். பரிசுத்த வேதாகமம் சத்தியமானது என்று நமக்கு நிறுபிக்கவே அறிவியல்செயல்பாடுகள் என்று தேவமனிதர் MD ஜெகன் பிரதர் சொல்லும்போது ஆஹா எத்தனை சத்தியவெளிப்பாடு இந்தவார்த்தை என்று கண்கலங்கினேன். காணப்படுகிறவைகள் எத்தண்மையது என்றும், காணப் படாதவைகளை பற்றி பேசப்படும் வழக்குகளை கருப் பொருளாக கொண்டும் ஆய்வுகள் செய்வதுதானே அறிவு இயல், தன் சொந்த வியூகங்களை அதிகாரத்தினால் உண்மையாக்கி நம்பவைப்பது தவறல்லவா. தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் [ஆதியாகமம் 2 : 15]

தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம் [ஆதியாகமம் 2 : 16]

ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்றுகட்டளையிட்டார் [ஆதியாகமம் 2 : 17]

நான் இந்த வசனத்தை எத்தனையோ நாட்கள் படித் திருந்தாலும், ஒருநாள் அந்த வசனம் கர்த்தரிடம் கேள்வி கேட்கவைத்தது, ஒரு கனியினாலா மனிதகுலத்திற்கே மரணம் வந்தது என்று கேட்டேன், இயேசப்பா எனக்கு பதில் சொன்னார். நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு இது விஷக்கனி இதை சாப்பிட்டால் சாவீர்கள் என்று செல்லிக் கொடுப்பதில்லையா, அப்படித்தான் சொல்லிக்கொடுத்தேன், அவர்கள் சாப்பிட்டதால் மனிதனின் மரபனுவில் மரணம் வந்து சேர்ந்தது என்று சொன்னபோது நான் அழுதேன். மரணமில்லா மகிமையின் சரீரமாக கர்த்தரால் படைக்கப்பட்ட மனிதனுக்குள் மரணம் வந்தது. ஆமாம் ஒரு காய் இருக்கிறது அதன் பெயரைசொல்ல மாட்டேன், அந்த காயை அப்படியே சாப்பிட்டால் பேசும்திறன், கேட்கும்திறன், பார்க்கும்திறன் என்று ஏதாவது பாதிக்கப்படுவது உண்மை, ஒரு விதை இருக்கிறது அதை சாப்பிட்டால் உயிருக்கே ஆபத்து வரும், அந்த விதைப்பெயரும் நமக்குதேவையில்லை, இப்படி நம் மருத்துவத்திற்காக கர்த்தர் படைத்த எத்தணையோ வகை தாவரங்கள் உண்டு.

கருவிலிருந்து உற்பத்தியாகிக் கொண்டிருக்கும் செல்கள், பதினைந்து வயதுவறைக்கும் உற்பத்தி யாகிக்கொண்டு மட்டும் இருக்குமாம், பதினைந்து வயதிற்குப் பிறகு செல்கள் உற்பத்தியாவதும், குறைந்த அளவில் சாவதுமாக இருக்குமாம், நாற்பது வயதிற்கு மேல் செல்லின் உற்பத்தி குறைந்துவிடுவதால் உடல் பலம் குறையஆரம்பிக்கிறது.பிறகு செல்கள் சாகமட்டுமே செய்கிறது. ஒரு மனிதனுடைய சரீரத்திலிருந்து ஒரு நிமிடத்திற்கு முப்பதாயிரம் செல்கள் செத்து வெளியேறு கிறது, இது மனித உடளியல் கூறும் ஆய்வு அறிக்கை, பிறகு மொத்தமாக மனிதன் ஒருநாள் செத்தே போகிறான். மனிதசெல்களில் தானே மரபனு இருக்கிறது, இந்த மரபனுதானே கர்த்தர் புரோகிராம் செய்த சாப்ட்வேர். ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வருஷம்: அவன் மரித்தான் [ஆதியாகம்ம் 5: 5] அன்று கர்த்தர் ஆதாமிடம் இந்த கனியை சாப்பிடும் நாளில் சாகவே சாவாய் என்று மனிதனுக்கு ஒதுக்கி வைத்த கனியை சாப்பிட்டதினால் தான் இப்படி மனிதனின் மரபனுக்குள் மரணம் வந்தது. ஆனாலும் கர்த்தரின் அன்பு ஆதாம் ஏவளைப்

பார்த்து பலுகிபெருகுங்கள் என்று சொன்னதினால் இன்று பலுகி பெருகி மனிதன் ஆயிரம்கோடியை நோக்கி போய்கொண்டிருக்கிறான்.

காயீனை கர்ப்பத்தில் சுமந்துகொண்டிருந்த நாட்களில் தன் சரீரமாறுதலை கண்டு பிரசவமென்றால் என்னவென்று தெரியாமலும், பிரசவ வலி என்றால் என்னவென்று தெரியாத உலகத்தின் முதல் தாய் பிரசவிக்கும்போது வலியினால் அலறுகிறதைக்கண்டு, ஆதாம் பயந்து ஓடிப்போயிருப்பானோ என்னவோ, தன்மகளுக்கு பிரசவம் பார்த்த தாயாக கர்த்தர் இருந்திருப்பார் என்று தேவமனிதர் M.D.ஜெகன் பிரதர் சொல்லும்போது கர்த்தரின் அன்பை நினைத்து நான் அழுதேன். அதனால் தான் கர்த்தரால் ஒரு மனிதனை பெற்றேன் என்று மனிதகுலத்தின் பரிசுத்த கபடற்ற முதல் தாய் சந்தோசத்தில் சொல்வதை வேதத்தில் படிக்கிறோம். கொஞ்சம் யோசிப்போமானால், காட்டில் வளரும் மந்தை மந்தையான ஆட்டிற்கும், மாட்டிற்கும், மானுக் கும், புலிக்கும், சிங்கத்திற்கும், யானைகூட்டத் திற்கும், ஒட்டகசிவிங்கிக்கும், யார் தொப்புள் கொடி அறுத்தது. அவைகளுக்கெல்லாம் ஜீவனைத்தந்த கர்த்தரல்லவா, கர்த்தரின் சத்தம்கேட்டு வெளிமான்கள் ஈனும் என்று சத்தியவேதாகமத்தில் சொல்லப்பட்டி ருக்கிறதே. குகையிலே கிடக்கும் சிங்ககுட்டிகளுக்கும் ஆகாரத்தை தருவிக்கிறார், பலநூறு அடிகள் உயரத்தில் பறக்கும் பறவைக்கூட்டங்களுக்கு இரவிலேயும் பூமியின் திசைகளை அறியும் அறிவை அந்த சின்னத்தலையின் மூலையில் வைத்தவர் யார், திமிங்கலங்கள் பசியினாள் வானத்தை நோக்கி வாய்திறக்க அவைகளை திருப்தி யாக்குகிரீர் என்றும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக் கிறது, எல்லோருக்கும் மிகவும் பிடித்தமான ஊழியக் காரர் வின்செண்ட் செல்வகுமார் ஐய்யா ஊழியத்திற்கு வருவதற்குமுன் இயேசப்பாவிடம் கேட்டாராம், அப்பா நான் எல்லா வற்றையும் விட்டு விட்டு வருகிறேன் என்னை பட்டினி போடக்கூடாது நான் யாரிடமும் கையேந்த மாட்டேன் நீங்கத்தான் எனக்கானதை கொடுக்கவேண்டுமென்று கேட்டபோது, நீல திமிங்கலத்தை பார்த்திருக்கிறாயா என்று இயேசப்பா கேட்க, நான் படத்தில் பார்த்திருக்கிறேன் என்று பதில் சொல்ல அதின் குட்டி ஒரு வேளைக்கு எத்தனை லிட்டர் பால் குடிக்கும் தெரியுமா என்று கேட்டாராம் இயேசப்பா, எனக்கு தெரியாது என்று செல்வகுமார் பிரதர் பதில்சொன்னதும் ஒரு வேளைக்கு ஐந்நூறு லிட்டர் பால் குடிக்கும், அதின் வயிற்றை நிறப்பும் என்னால், உன் ஒரு ஜான் வயிற்றை நிறப்ப முடியாதா என்று இயேசப்பா கேட்டதும், கதறி அழுதாராம் செல்வகுமார் பிரதர் இது அவருடைய அற்புத சாட்சி. ஆபிரகாம்லிங்கன் தினந்தோறும் அதிகாலையில் இயேசப்பாவிடம் அன்றன்டுடைய ஆலோசனை பெற்றபிறகுதான் அந்தநாளின் தன் அரசு வேலையை தொடங்குவாராம். கர்த்தரின் செயல்களையும் அவரின் அன்பையும் விவரித்து எழுதினால் உலகம் கொள்ளாது,

ஆமாம் உலகத்தில் அதிகமாக அச்சடிக்கப்படும் புத்தகம் பரிசுத்த வேதாகமம், உலகத்தில் மிக அதிகமாக விற்பனையாகும் புத்தகம் பரிசுத்த வேதாகமம், பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி கருத் துக்களும் சாட்சிளும் அடங்கிய புத்தகங்கள் தான் உலகத்தில் அதிகம், எதற்காக இத்தனைகோடி சாட்சி கள், ஆமாம் எல்லாம் அப்பாவிமனித இனத்தை காப்பாற்றுவதற்குத்தான். யாரிடமிருந்து, கர்த்தருக்கு பிடிக்காதவைகளில் இருந்துதான். மனிதனின் ஆத்துமாவை பாவங்களுக்கும், நம்மை படைத்தவர் நியமித்த கட்டளைகளை மீறுவதற்கும், மனசாட்சியை கொல்வதற்கும், கற்றுக்கொடுத்து, பாவ துர்நாற்றத்தை உடையவர்களாக நம்மை மாற்றி, பாவத்தை பாராத சுத்த கண்களையுடைய கர்த்தர் நம்மை பார்க்கவிடாமல், பாவ துர்நாற்ற போர்வையினால் நம்மை மறைத்து, மனித இனத்தையே தமக்கு அடிமையாக்கி வைத்திருப் பவன் தான் இந்த உலகத்தின் அதிபதியானவன், அவன் பெயர் தான் சாத்தான், இவன் கற்பணையான வன் அல்ல இவன் கர்த்தரால் தள்ளப்பட்டு பரலோகத் தைவிட்டு விழுந்துப்போன தூதுவன் அவனுக்கு விடி வெள்ளி என்ற பெயரும் உண்டு, லத்தீன் மொழியில் விடிவெள்ளி நட்சத்திரத்திற்கு **லூசிபர்** என்று பெயராம். இவனால் பூமியில் பிறந்த ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தீய சக்தியால் ஒவ்வொரு நிமிடமும் சோதிக் கப்பட்டு கர்த்தரின் கண்கள் என்னை பார்த்துக் கொண்டிருக்கிறது என்ற உணர்வற்றவனாக மாற்றப் பட்டுக்கொண்டிருக்கிறான்.

என் ஜனம் உணர்வில்லாமையால் சங்காரமாகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார், ஆமாம் நாம் உணர்வடைவதற்கு இந்த பூமியில் எவ்வளவோ தடை கள் சத்துருவின் வல்லமைகளால் எழுப்பபடுகின்றது. நாம் கர்த்தரை விட்டு வெகு தூரமாக்கப்பட்டு விடு கிறோம், நம்மை படைத்த தேவனைவிட்டு விலகுவதே பாவம் என்று சத்திய வேதம் சொல்கின்றது. இதைப் பற்றி கர்த்தர் மனிதனோடு பேசவிரும்பினார், ஆதாமோடு பேசினார், ஆதாமோ சாத்தானால் ஏமாற்றப்பட்ட தன் மனைவி கொடுத்த கனியை சாப்பிட்டு தன்மகிமையின் சரீரத்தை இழந்து மரணத்தை கொண்டுவந்து நிர்வானத்தை அறிந்தான் கர்த்தரால் ஏதேன்தோட்டத்தைவிட்டு துரத்தப்பட்டான். பிறகு ஆதாமின் குமாரன் காயீனோடும் பேசினார், ஆதாம் செலுத்தாத காணிக்கையை முதல்பிறந்த மனிதன் காயீன் கர்த்தருக்கு கொண்டுவந்தான், இதற்கான வசனங்களை பார்ப்போமா .

சிலநாள் சென்றபின்பு காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் கானிக்கையாக்க் காணிக்கையாகக் கொண்டுவந்தான். [ஆதியாகமம் 4: 3]

ஆபேலும் தன்மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவை களிலும் சிலவற்றை கொண்டுவந்தான் ஆபேலையும் அவன்கானிக்கை யையும் கர்த்தர் அங்கிகரித்தார்.[ஆதியாகமம் 4 : 4]

காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி அவன் முகநாடி வேறுபட்டது [ஆதியாகமம் 4 : 5]

அப்பொழுது கர்த்தர் காயீனைநோக்கி உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று உன் முகநாடி ஏன் வேறுபட்டது [ஆதியாகமம் 4 : 6]

நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.[ஆதி 4: 7]

இந்தவசனங்களை படிக்கும்போது, இயேசப்பா காயீன் தானே உங்களுக்கு நிலத்தின் விளைச்சலில் முதல் காணிக்கையாக கொண்டுவந்தான் ஆதாம் கூட அப்படிசெய்யவில்லையே நீங்கள் ஏன் காயீனின் காணிக்கையை அங்கீகரிக்கவில்லை என்று கேட்டேன். ஆதாமை சபித்தபோது பூமியையும்,அது முளைப்பிக்கும் சகலத்தையும் சபித்தேன் அந்த சாபத்தீட்டான முதல் கனிகளை சாத்தானின் தூண்டுதலால் காயீன் எனக்குகாணிக்கை கொண்டுவந்தான் என் சாபம் அதில் இருந்ததினால் நான் ஏற்கவில்லை. பூமியின் விலங்கினங்களை நான் சபிக்கவில்லை அதனால் ஆபேலின் கானிக்கையை ஏற்றுக்கொண்டேன் என்று என்னிடம் சொல்லிக்கொடுத்தபோது நான் அழுதேன். பின்பு ஏனோக்கோடு பேசி அவனோடு உலாவினார், ஏனோக்கும் கர்த்தருக்கு ஊழியம் செய்தான் ஏனோக்கு கர்த்தரால் எடுத்துக்கொள்ளபட்டான். அதன் பிறகும் இருதய சுத்தமுள்ள பலரிடம் கர்த்தர் பேசியதற்கு எத்தனையோ சாட்சிகள் உண்டு, ஆதாம் முதல் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாக போனதினாலும்,அக்கிரமம் பெருகினதினாலும், மனிதனை படைத்ததற்காக தேவன் மனஸ்தாபப் பட்டார். பூமியை சுத்திகரிக்க நாசியில் சுவாசமுள்ள யாவற்றையும் அழித்துவிட சேனைகளின் கர்த்தர் முடிவெடுத்தார், அதை அக்காலத்தில் உத்தம னாக வாழ்ந்த நோவா என்ற தெய்வபக்தி மிகுந்த உண்மையுள்ள மனிதனிடம் தெரிவித்து, டைட்டானிக் கப்பலை விட பெரிய மூண்று அடுக்குள்ள கப்பலை உண்டாக்க சொல்லிக்கொடுத்தார், அவனோடு பேசினார், கர்த்தர் சொல்லியபடியெல்லாம் நோவா தன் பிள்ளைகள் சேம்,காம், யாப்பேத், அவர்களுடைய மனைவிமார்கள், நோவாவின் மனைவி,மற்றும் கூலிக்காக வேலை செய்தவர்களையும் வைத்து ஒரு வருடமாக கட்டிமுடித்தான். கப்பலை கட்டிமுடிக்கும் வரையிலும் ஜலப்பிரளயம் வரப்போகிறது பூமியின்மீது நாசியில் சுவாசமுள்ள யாவற்றையும் கர்த்தர் அழிக்கப் போகிறார் என்று நாள்தோறும் சொல்லிக்கொண்டே இருந்தான். எல்லோரும் நோவாவை பைத்தியக்காரன் இவ்வளவுபெரிய கப்பலை சமுத்திரமே இல்லாத இந்த தரையிலே கட்டுகிறானே இதை எப்படி சமுத்திரத்தில் கொண்டு போய் சேர்ப்பான் என்று கேலியும் செய்திருக் கலாம், ஆனால் ஜலப்பிரளயம் வந்து எல்லோரையும் அழித்துப் போட்டது, இது கதைபோல இருக்கின்றதே இதை எப்படி நாம் நம்புவது என்று நாம் கேட்க வாய்ப்பும் இருக்கின்றது

நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம்மாதம் பதினேழாம் தேதியாகிய அந்தநாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன வானத்தின் மதகுகளும் திறவுண்டன. [ஆதியாகமம் 7:11]

நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது. [ஆதியாகமம் 7:12]

ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகின தினால் வானத்தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன [ஆதியாகமம் 7:19]

மூடப்பட்ட மலைகளுக்கு மேலாய்ப் பதினைந்துமுழ உயரத்திற்கு ஜலம் பெருகிற்று [ஆதியாகமம் 7:20]

நோவா சொன்னப்படி ஜலப்பிரவாகம் வந்து பூமியின் மீது நாசியில் சுவாசமுள்ள யாவற்றையும் அழித்துப் போட்டது. பேழையின் மூலமாக சகலமிருக ஜீவன் களின் ஒவ்வொரு ஜோடுகளை மாத்திரம் கர்த்தர் காப்பாற்றினார், மனிதன் முதல் சகல ஜீவராசிகளும் வெஜிட்டேரி யனாகத்தான் படைத்திருந்தார், அதனால்தான் பேழைக்குள் ஒருவருடத்திற்கு ஆகார பஞ்சம் இல்லை. இதோ அதற்கான ஆதார வேத வசனம்.

பின்னும் தேவன் இதோ பூமியின்மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது [ஆதியாகமம் 1: 29]

பூமியிலுள்ள சகல மிருகஜீவன்களுக்கும், ஆகாயத்தி லுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார் அது அப்படியே ஆயிற்று.[ஆதியாகமம் 1 : 30]

சிங்கம் புலி கூட புல்லைத்தான் பேழைக்குள் இருக்கும் வரை சாப்பிட்டது, எவரெஸ்ட்டுக்குமேல் பதினைந்து முழ ஜலம் பிரவாகித்ததால் ஆழ்கடலில் நீந்தும் திமிங்கலம் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் நீந்த முடியாமல் இமயமலையின் எவரஸ்ட்டின் மேல் மிகப்பெரிய திமிங்கலத்தை உறைந்த நிலையிலும், எடுத்த போட்டோவையும்,தென்ஆப்பிரிக்காவில் தான்சானியாவிலுள்ள கிளிமாஞ்சாரோ என்ற பனி மலைப் பகுதியிலும்கடல்வாழ் உயிரினங்கள் சிக்கி உறைந்துப் போயிருப்பதையும் 1986 ஸ்சைன்ஸ் டுடே பத்திரிக் கையில் நாசா சர்வதேச ஆய்வகம் படத்தோடு கட்டுரை வெளியிட்டிருந்தது. ரஷ்ய தேசத்தில் உள்ள அராரத் மலையில் புதைந்துபோன நோவாவின் கப்பலின் அடித்தட்டி

னையும் புதைப்பொருளாராய் சியாளர்கள் நாசவின் செயற்கைகோள் புகைப்படம் மூலமாக கண்டுபிடித்து வெளியிட்டார்கள், மூழ்கடித்த அந்த ஜலப்பிரவாகத்தை ஒரு வருடத்தில் அகற்றி வெட்டாந் தரை காணப்பட செய்தார். எவரெஸ்ட்டை மூழ்கடித்த ஜலப்பரவாகம் எப்படி ஒருவருடத்தில் காய்ந்துபோகும் இது நமக்கு தோன்றும் சந்தேகம் . நம்மஊர் ஏரி காய்வதற்கே இரண்டுவருடமாகிறது எப்படி காய்ந்தது என்றுபார்ப்போம், ஒரு நாள் வேதத்தை படித்துக் கொண்டிருந்த போது

யோர்தான் அறுப்புக்காலம் முழுவதும் கரைபுரண்டு போம். பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே [யோசுவா 3:15]

மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக் கடுத்த ஆதாம் ஊர்வரைக்கும் ஒரு குவியலாக குவிந்தது உப்புக்கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று: அப்பொழுது ஜனங்கள் எரிகோவுக்கு எதிரே கடந்துபோனார்கள். [யோசுவா 3: 16]

இயேசப்பா தண்ணீர் எப்படிப்பா குவியலாக நிற்கும், என்று கேட்டேன், நோவா காலத்து ஜலப்பிரளயத்தை அன்டார்டிக்காவிலே குவியலாக இழுத்துவைத்திருக்கி றேனே அப்படி என்று அவர் சொன்னதும் நான் அழுதேன், இந்த பாவிக்கும் பதில் தருகிறாரே என்றுதான் அழுதேன், இதற்கான ஆதாரமில்லாமல் இயேசப்பா சொன்னதை யாரிடமும் சொல்லமுடியாமல் இருந்தேன். ஒருநாள் திடீரென்று சங்கீதம் 104 ஆம் அதிகாரம்படி என்று சொன்னார் ஆமாம் இதோ எவரஸ்டிற்கு மேல்ஓடிய ஜலப்பிரளயம் இப்படித்தான் வற்றினது, இதோ அதற்கான ஆதார வசனம்

பூமியை ஒரு போதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் அதை ஸ்தாபித்தார்.

அதை வஸ்திரத் தினால் மூடுவது போல் ஆழத்தினால் மூடினீர் பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது.

அவைகள் உமது கண்டிதத்தால் விலகியோடி, உமது குமுறலின் சத்தத்தால் விரைந்துபோயிற்று.

அவைகள் மலைகளில் ஏறி பள்ளத்தாக்குகளில் இறங்கி நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது.

அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளா தபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர் [சங்கீதம் 104:5-9]

அன்டார்டிக்காவை பார்த்திராத தீர்க்கதரிசியாகிய தாவீது ராஜா சொல்லி இருக்கின்றார், அன்டார்டிக்கா பூமி வெப்பமயமாதலினால் உருகினாலும் அது பூமியை திரும்பவும் வந்து மூடிக்கொள்ளாது, கடவாதிருக்கும் எல்லையை என்று கர்த்தரே வாக்குகொடுத்திருக்கிறார்.

மேலும் நாசா சர்வதேச ஆய்வகம் ஜலப்பிரளயம் பூமிக்குள்ளாக ஹைட்ரோ பாறைகளாக இருப்பதாக வும், அது உலகத்தின் தண்ணீர்தேவைகளை தீர்க்குமென்றும் படத்துடன் வெளியிட்டிருந்தார்கள். இதற்கு ஆதார வசனம் இதோ.

ஜலம் கல்லுருவங்கொண்டு மறைந்து, ஆழத்தின் முகம் கெட்டியாய் உறைந்திருக்கிறதே. [யோபு 38: 30]

இப்டித்தான் எவரெஸ்டிற்குமேல் ஒடிய நோவாகாலத்து ஜலப்பிரவாகம், ஹைட்ரோபாறைகளாக மறைந்து, குவில் குவியலாக உறைந்துமிருக்கின்ற உண்மை.

ஆதாமை சபித்தபோது பூமியை சபித்த கர்த்தர் ஜலப்பிரளயத்தினால் மூழ்கடித்து பாவத்தையும் சாபத்தையும் கழுவிசுத்திகரித்தார் பின்பு பூமியை ஆசீர்வதித்தார் பூமியின்சாபம் நீங்கினது ஞானஸ்த்தானத்தின் அர்த்தமும் இதுவே ,இதோவசனம்

அப்பொழுது கர்த்தர் இனி நான் மனுஷன்நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை, மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை. **[** ஆதியாகமம் 8:21]

பூமியுள்ள நாள்ளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைக்காலமும் மாரிக்காலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார். [ஆதியாகமம் **8:22]**

இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன் படிக்கையை ஏற்படுத்து கிறேன் என்றார் [ஆதியாகமம் 9:11]

ஆனால் நாமோ பூமி வெப்ப மயமாகுதலினால் அன்டார்டிக்கா உருகும் அப்போது பூமி ஜலப்பிரவா கத்தினால் மீண்டும் மூடப்பட்டுவிடும் என்று நம் சர்வ தேச வின்ஞாணம் கற்பித்திருக்கின்றது, சிருஷ்டி கர்த்தர் சொல்வதை நம்பாமல், மனித கற்பனைகளை நம்புவதே மனிதனின் சுபாவமாக போய்விட்டது, ஆனால் இயேசப்பா சொன்னதை பார்ப்போம்

நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும் [மத்தேயு 24:37]

எப்படியெனில் ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்தில் நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும் பெண் கொண்டும் பெண்கொடுத்தும் [மத்தேயு 24:38]

ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள் அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும் [மத்தேயு 24:39]

நோவாகாலத்தில் ஜனங்கள் பாவ உணர்வில்லாதவர் களாக இருந்ததுப்போல, மனுஷ குமாரன் வரும் நாட்களிலும் உணர்வில்லாதவர்களாக இருப்பார்கள். என்பதே அந்த வசனத்தின் அர்த்தம், அவர் ஜலப் பிரளயத்தை சொல்லவில்லை. பிறகு நோவா பேழையி லிருந்து தரை இரங்கிய இடத்தில் பலிபீடம் கட்டி கர்த்தருக்கு தன் பழக்கத்தின் படி பலிகளை செலுத்தி சேனைகளின் கர்த்தரை தொழுதுகொண்டான், அதற்குப்பின் உருவான தலைமுறைகள் அந்த பலிப் பீடத்தையே வணங்கத் தொடங்கிஇருப்பார்கள், அங்கே அடையாளத்திற்காக கற்களையும், பாறைகளையும், நட்டுவைதிருப்பார்கள் அதுவும் பிற்காலத்தில் வணக் கத்திற்குரியதாக மாற்றப்பட்டிருக்கும்,பிறகு அந்தபாறைகள் நோவாவின் உருவம் இப்படி இருந்திருக்கலாமென்று செதுக்கி இருக்கலாம் அவர்மனைவி இப்படிஇருக்கலாமென்று நினைத்து செதுக்கப்பட்டிருக்கலாம், இப்படி விக்கிரக வழிபாடு உண்டாயிருக்கலாம்.

ஆனாலும் இதுவும் இறைவன் மீது மனிதன் வைத்திருக் கும் பக்தியினாலும், பயத்தினாலும், அன்பினாலும் ஏற்படும் விளைவுகள் தான். ஆனால் அது வழிதப்பிப் போன தேவபயம். நேவாவின் மூன்று பிள்ளைகளின் சந்ததிகளாக மனிதர்கள் பூமியை நிரப்பினார்கள் பூமியில் பாஷைகளும் உண்டாயின.

பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரேவிதமான பேச்சும் இருந்தது [ஆதியாகமம் 11:1]

பின்னும் அவர்கள் நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு நமக்கு ஒரு நகரத்தையும் வானத்தைஅளாவும் சிகரமுல்ல ஒரு கோபுரத்தையும் கட்டி நமக்கு பேர் உண்டாகப்பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள் [ஆதியாகமம் 11 : 4]

மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார் [ஆதியா 11:5]

நாம் இறங்கிப்போய் ஒருவர் பேசுவதை மற்றெருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார் [ஆதியாகமம் 11:7]

அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார் அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள் [ஆதியாகமம் 11:8]

இவர்கள் ஒரே இடத்தில் வாழ்ந்தால் பற்றாக்குறை ஏற்பட்டு,மீண்டும் பாவம் பெருகும் என்பதால் அவர்களை பூமி மீதெங்கும் சிதறிப்போக அவர்களின் மொழிகளை கர்த்தர் மாற்றினார், இதனால் பூமியெங் கும் மனிதஇனம் சிதறடிக்கப்பட்டாலும் கர்த்தருக்கு பயப்படும் பயம் மாத்திரம் மனிதனின் மரபணுக்களை விட்டு போகாமல் இருந்தது. பரிசுத்த வேதாகமம் இதை நிரூபித்து காட்டிக் கொண்டிருக்கின்றது. சீனர்கள், ஜப்பானியர்கள்,கொரியர்கள்,நேப்பாளியர்கள், மங்கோலியர்கள், மலேசியர்கள், தாய்லாந்தியர்கள் ,ஒரு தகப்பனின் சந்ததியாகவும, அரேபியர்கள் ,இஸ்ரவேலர்கள்,ஜெர்மானியர்கள், ரஷியர்கள் ,பாலஸ்தீனர்கள், சீரியர்கள், ரோமானியர்கள் ஒருதகப்னின் சந்ததியாகவும், இந்தியர்கள், பாக்கிஸ் தானியர்கள்,ஆப்பிரிக்கர்கள், எகிப்தியர்கள், ஐரோப்பியர்கள்,அமெரிக்கர்கள், ஆஸ்திரேலியர்கள், என்று ஒருதகப்பனின், சந்ததியாக வும். சேம், காம், யாப்பேத் என்பவர்களாகிய நோவாவின் பிள்ளைகளிடமிருந்து உருவான சந்ததிகள்தான் இப்போதைய சந்ததியாராகிய நாமெல்லாம் என்பது அவரவர் தோற்றமே நமக்கு வெளிப்படுத்தினாலும் கர்த்தருக்கு பயப்படும் பயம்மட்டும் மாறாமல் தான் இருக்கின்றோம். உலகின் முதல் நாகரீகமான பாபேல் கோபுரத்தின்நகரம் பாபிலோன்நாகரீகம், பிறகு மெசப்பதோமியா நாகரீகம், அங்கு வாழ்ந்த மனிதர்களுக்குள் விக்கிரகம் செய்யும் குடும்பத்தில் பிறந்த ஆபிராகாம் இந்த விக்கிரகங்கள் இறைவனல்ல, என்று தன் தகப்பன் தேராகுக்கு புரியவைத்து இறைவனை காணவேண்டுமென்ற வாஞ்சையாய் இருந்தபோது சேனைகளின் கர்த்தர் அவனோடு பேசினார், அவனை வேறுபிரித்தார், ஆபிரகாம் கர்த்தருக்கு தோழனாக கர்த்தரால் தேர்ந்தெடுக்கப் பட்டான், ஆபிரகாமின் குமாரன் ஈசாக்கு பயபக்தியுள்ள சந்ததியாக பிறந்தான், இவனுக்குள் கர்த்தரால் ஆசிர் வதிக்கப்பட்ட சந்ததியாக ஏசாவும், யாக்கோபும் பிறந்தார்கள், இவர்களில் யாக்கோபு கர்த்தருக்கு பிரியமான இருதயமுள்ளவனாக இருந்தான், அதனால் யாக்கோபோடு பேசினார், அவன் பிள்ளைகளை ஆசீர்வதித்தார், ஏசாவையும் ஆசீர்வதித்தார். ஆகாரிடம் ஆபிரகாமிற்கு பிறந்த இஸ்மவேல் பாலைவனத்தில் தாகத்தினால் சாகக்கிடந்த. போது பிள்ளையின் முனகல் சத்தம்கேட்டு கதறிஅழும் ஆகாரிடம் ஆகாரே ஏன் அழுகிறாய் என்று கர்த்தர் பேசினார், அந்தஅடிமைதாய் என்னைகாண்கின்ற தேவனை நானும் கண்டேன் என்று முகங்குப்புறவிழுந்து கதறிஅழுதார், இஸ்மவேலை பெரியஜனமாக்குவேன் என்று ஆகாரிடம் வாக்குதத்தம் செய்த சேனைக்களின் கர்த்தர் இஸ்மவேலோடு இருந்தார். யாக்கோபின் பிள்ளைகள் பண்ணிரெண்டுப் பேரில் யோசேப்பு கர்த்தரிடத்தில் பயபக்திஉள்ளவனாக இருந்தபடியால் அவனோடு பேசி வழிநடத்தினார், எகிப்தில் ஏழுவருடம் செழிப்பும்

பின் ஏழுவருடம் மகா வறட்சியினால் பஞ்சமும் வரப்போகிறதை எகிப்தின் அரசன் பாரோனுக்கு சொப்பனத்தில் காண்பித்ததை எடுத் துறைத்ததால் யோசேப்பு பாரோனுக்கு அடுத்த அதிகாரத்தில் உயர்த்தப்பட்டான். எகிப்தின் ஏழு வருடசெழிப்பை சேகரித்து வரும் ஏழு வருட வறட்சியை சரிகட்டவே மகா பெரிய கலஞ்சியங்களை கட்டி செழிப்பால் ஏழுவருடம் விளைந்த உணவு பதார்த்தங் களையும், கோதுமையையும் ஏழுவருடங்கள் கெட்டுப் போகதபடி கலஞ்ஜியங்களை வடிவமைத்தான்

அவ்வேழு வருஷங்களில் எகிப்து தேசத்தில் விளைந்த தானியங்களையெல்லாம் அவன் சேர்த்து தானியங் களையெல்லாம்அவன்சேர்த்து, அந்தந்த பட்டணத்தில் அதினதின் சுற்றுப்புறத்து தானியங்களைக் கட்டிவைத்தான். [ஆதியாகம்ம் 41 : 48]

இப்படி யோசேப்பு அளவிறந்ததாய்க் கடற்கரை மணலைப்போல மிகுதியாக தானியத்தையுச் சேர்த்துவைத்தான் அது அளவுக்கு அடங்காததா யிருந்தது.[ஆதியாகமம் 41 : 49]

பஞ்சம் உலகமெங்கும் இருந்ததால் சுற்றிஇருந்த நாடுகளில் இருந்தும் உணவு பதார்தங்களையும், கோதுமையையும் வாங்கி சென்றார்கள், உணவுப் பொருட்கள் கெடாமல் இருக்க யோசேப்பால் கட்டப்பட்ட கலஞ்சியங்கள் யோசேப்பிற்குபின் சில நூறுவருடங்கள் கழித்து வந்த சந்ததியர்கள் உணவு கெடாமலிருக்கும் அமைப்பை கொண்ட இந்த கலஞ்சியங்கள் மரித்துப்போன தம் மன்னர்களின் உடலையும் கெடாமல் பார்த்துக்கொள்ளும் என்று முடிவெடுத்து இன்று நாம் பார்க்கும் கல்லறை பிரமீடுகளாக மாற்றிவிட்டார்கள்.கர்த்தர் யோசேப் போடே இருந்தார்,பின்பு நானூற்று முப்பது வருடம் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த அவர்களுக்குள் மோசேயை கர்த்தரிடம் பயபக்தியுள்ள மனிதனாக எங்கும் உண்மையுள்ளவனாக தெரிந்துகொண்டு மோசேயோடும் மோரியா மலையில் முட்செடி அக்கி னியிலே தோன்றி பேசினார், மோசேயின் நடத்திப்பின் போது கர்த்தர் வனாந்திரத்தில் கூடாரங்களில் தங்கியி ருந்த முப்பதுலட்சம் இஸ்ரவேலருடன் பேசினார், பிற்காலத்தில் சாமுவேலோடு அவன் சிறுபிள்ளையாக இருக்கும்போதே பேசினார், தான் ஏற்படுத்தின தீர்க்க தரிசிகளிடமும், தான் தெரிந்து கொண்ட அரசன் தாவீதோடும் பேசினார், தனக்கு பிரியமாய் நடந்த சாலமனோடு பேசினார்,பின்பு எலியாவோடும், எலிசாவோடும், எரேமியாவோடும்,ஏசாயாவோடும், எசேக்கியலோடும், தானியேலோடும், இன்னும் இன்றுவறை சொல்லிக்கொண்டே போகலாம், பிறதேசத்து அரசர்களிடமும், பிள்ளைகளிடமும், கர்த்தர் பேசினார். நமக்கு வாயை படைத்து அதில் பேசும் திறனைதந்தவர் தான் நம்மோடு பேசுகின்ற கர்த்தர், நமக்கு காண்பதற்கு கண்களை படைத்தவர் தான் நம்மை எப்போதும் காண்பவராக இருக்கின்ற கர்த்தர். நாம் தான் நாம் உண்டாக்கும் விக்கிரகங்க ளுக்கு நம்மை காண்கின்ற கண்களையும், நம்மோடு பேசுகின்ற வாயையும் படைக்க முடியாமல் போனோம், அதனால் நாம் அதன் எதிரே நின்றாளும் நம்மை அவைகள் காண்பதுமில்லை, நாம் அதற்குமுன் நின்று பேசினாலும் நம்மோடு அவைகள் பதில் பேசுவது மில்லை. இருதயத்தில் சுத்த முள்ளவன் உலகில் எந்த இடத்திலிருந்தாலும் அவநோடு கர்த்தர் பேசுவார், சில சந்தர்ப்பங்களில் சில காரணங்களுக்காக சில பேருடன் கர்த்தர் பேசியதும், பேசுகிறதும் உண்டு, தாம் வணங்கும் விக்கிரக தெய்வம் தான் தம்முடன் பேசுவதாக நினைத்து பலசூழ் நிலையில், தவறாக புரிந்துகொண்ட நல்லவர்களும் உண்டு,ராஜாக்களும் உண்டு. மனிதனோடு கர்த்தர் பேசிவழிநடத்தவேண்டிய அவசிம் என்ன, எதற்காக மனிதன்மீது கர்த்தர் இவ்வளவு கருணைவைக்க வேண்டும், ஆமாம் மனிதன் மரித்து அவன் ஆத்மா பரலோக ஆராதணைபர்வதத்தை அடைந்து சேனைகளின் கர்த்தர் சமூகத்தில் நின்று அவரை ஆராதிக்கும் அந்த உண்ணத நிலையை அடையவே படைக்கப்பட்டான்.

மனிதன் செத்தப்பின் பரலோகத்தில் அவன் ஆத்துமா யுகா யுகமாகவாழுமா, என்ன இது முட்டாள் தனமான கற்பணை, இதற்காக ஏன் இப்படி சிறையில. அவமானப்பட்டு, சித்திரவதை பட்டு,அடிபட்டு சாகின்றீர்கள், என்று சிறையில் சித்திரவதைப்படும் கிறித்துவகைதிகளிடம் கேட்டானாம் அந்த ரஷியா தேசத்து கம்மீயூனிச வெறிபிடித்த தளபதி, கைதியாக இருந்த ஒரு கிறிஸ்துவின் மகன் சொன்ன பதில், அய்யா என்னுடைய தாயின் வயிற்றில் நான் கருவாக உருவெடுத்தேன், எனக்கு இரண்டுகண்கள், இரண்டு காதுகள்,ஒருமூக்கில் இரண்டு துவாரம், இரண்டு கைகள், இரண்டுகால்கள், பத்துமாதத்திற்குள் வளர்ந்து விட்டேன், ஏதோ ஒரு திரவத்தில் இருட்டிலும், பேர்இறைச்சலிலும், உருவாக்கப்பட்டிருந்தேன் ஆனால் இதெல்லாம் எனக்கு எதற்கு, நான் நீர் குடத்திற்குள் சுருண்டல்லவா கிடக்கிறேன், இதுத்தான் நான் வாழ்ந் துக் கொண்டிருக்கும் உலகம் என்று நினைத்தேன், கொஞ்சநாட்களில் அந்த நீர் குடம் உடைந்துப்போய் நான் பழக்கப்படாத, நான் கண்டிராத, இந்த உலகத்தில் என்னை தள்ளிவிட்டது, கொஞ்ச நாட்களில் என் கண்கள் என்தாயை கண்டது பின் அப்பாவை பாரென்று என் தாய்சொல்லிக் கொடுத்தாள் பின்புத்தான் இதுவேறு உலகம் என்றும் அவயங்கள் படைக்கப்பட்ட நோக்கத்தையும் தெரிந்துகொண்டேன், என் தாயின் கருவறையில் இருந்த நாட்களில் இப்படி ஒரு உலகம் இருப்பது எனக்குத்தெரியாது. என்று சொன்ன பதிலை கேட்டு திகைத்துப்போனான் அந்த ரஷ்ய தேசத்தின் தளபதி, ஆமாம் நாம் குழந்தைகளாக பிறந்து நமது அவையங்களின் தேவைகளை உணர்ந்ததுபோல, நாமெல்லாரும் இயேசுகிறிஸ்துவின் அவையங்களாக இந்த உலகத்திற்கு அனுப்பட்டு இருக்கிறோமென்று

உணரும்வறையில் நமக்கு இந்த மனிதப்பிறவி புரியாத பதிர்தான். தன் சொந்த இரத்தத்தினால் நம்மை உலகப் பிசாசினால் உண்டான பாவத்தை கழுவி சுத்திகரித்து கொண்டுபோகப்போகிறவர் தான் நம் இயேசப்பா. இதென்ன ஒருவனை இரத்தத்தினால் எப்படி கழுவி சுத்தம் செய்யமுடியும் அதுவும் இரண்டாயிரம் வருடத் திற்கு முன்பு சிந்திய இரத்தத்தால் எப்படி முடியும் என்று சொல்லலாம். இதோ வேதவசனம் சொல்வதை பார்ப்போம்.

உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப் பழிவாங்குவேன் [ஆதியாகமம் 9 : 5]

பாவம் நம் சரீரத்தில் இராமல் நம் உயிரிலே இருக்கிறது, நம் உயிர் நம் இரத்தத்தில் இருக்கிறது, இயேசுகிருஸ்து வின் இரத்தமாகிய அவர் உயிரால் நம் உயிரை சுத்தமாக்கி பரிசுத்தத்தை தந்து பரலோகத்திற்கு போகப் போகும் நம் உயிராகிய ஆத்துமாவையே கொண்டு போகப் போகிறார்.

தேவன், தம்முடைய ஒரேபேறானகுமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வள வாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். [யோவான் 3:16]

உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். [யோவான் 3: 17]

அவர் ஸ்திரியின் வித்தாகவும், பரிசுத்த தேவ ஆவியான வராகவும் பிறந்ததினால் இயேசப்பாவை கன்னியின் வயிற்றில் உருவான தேவனின் ஒரே பேரான குமாரன் தான் என்று உலக ஞாணத்தாலும், மெய்ஞானத்தாலும், நிரூபிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தெய்வம்தான் நம் இயேசப்பா. ஆமாம், டாக்டர் ரான் என்ற ஆராய்சி யாளர் அவர் குழுவினருடன் மேற் கொண்ட ஆய்வின் போது முதன்மையான, ஆதி திரு வேதாகமத்திலும், இஸ்ரவேலர்களின் வரலாற்றிலும், எழுதப் பட்டப்படி எரேமியா உடன்படிக்கை பெட்டியுடன் கொல்கதா மலையின் குகைஒன்றில் தங்கி இருந்தாரென்று கண்டறியப்பட்டது, அதன்படி அந்த குழுவினர் குகையை கண்டுபிடித்து அதற்குள் ஆய்வு நடத்திய போது, உடன்படிக்கைப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டது அதைசுத்தம் செய்யும்போது அதன்மேல் கருப்பு பசை போன்றதை காய்ந்த நிலையில் கண்டு அது இரத்தம் என்று ஆய்வுசெய்தபோது உருதியானது, பிறகு அந்த இரத்தம் எப்படி எங்கிருந்து உடன்படிக்கை பெட்டியின் மீது விழுந்திருக்கிறது என்று ஆய்வுசெய்த போது குகையின்மேல்புற பாறைகளின் வெடிப்பின் வழியாக வழிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது அதன் அடிப்ப டையில் தொடர்ஆய்வுசெய்த போது அந்த வெடிப்பிற்கு மேல்பகுதியில் மூன்று குழிகள் பாறையில் ஏற்படுத்தப் பட்டிருப்பதை கண்டறிந்தனர், அவைகளில் நடுவாக இருந்த பாறைகுழியின் மெல்லிய வெடிப்பின் வழியாக வழிந்த இயேசப்பாவின் இரத்தம் என்று கண்டு உருதிப் படுத்தினர், இயேசப்பாவின் பரிசுத்த இரத்தம்சிந்திய சிலுவையிலிருந்து வழிந்து பரிசுத்த உடன்படிக்கை பெட்டியின்மேல் தெளிக்கப்பட்டிருக்கிறதை கண்டு ஆச்சரியமடைந்தனர், பின்பு மரபணு ஆய்வு செய்த போது மகாஆச்சரியம் காத்திருந்தது.

தாயுடைய 24 குரோம்சமும் தந்தையுடைய 23 குரோம்சமும் இருந்தால் பெண்குழந்தையாக பிறக்கும், தாயுடைய 23 குரோம்சமும் தந்தையுடைய 24 குரோம்சமும் இருந்தாள் ஆண்குழந்தையாக பிறக்கும் தாயுடைய 24 குரோம்சமும் தந்தையுடைய 24 குரோம் சமும் இருந்தாள் திருநங்கையாக பிறக்கும்,இதுத்தான் பிரப்பின் ரகசியம்என்று மருத்துவம் சொல்கிறது.

இயேசப்பாவின் இரத்த மரபணு பரிசோதணையில் தாயுடைய 23 குரோம்சம் மாத்திரமே இருந்தது, வேறு குரோம்சமே காணப்படவில்லை அவர் தேவ ஆவியா னவராக தானாகவே கருவிலே அவதரித்ததினால் ஆவியானவராகிய தேவனின் வல்லமையினால் அவர் தேவகுமாரனாக பிறந்து, ஸ்திரீயின் வித்தாகவே வளர்ந்தார், இது அவர் தெய்வம் என்பதற்கு அறிவு இயல் தந்த ஆராய்ச்சியின் சாட்சி.. TPM பாஸ்டர் துரை அய்யாவின் செய்தியிலும், கோணா சௌரிபாபு அய்யாவின் செய்தியிலும் நான் கேட்டவைகள் இஸ்ரவேல் அரசாங்கமே உடண் படிக்கைப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டதை சட்டரீதியாகவே அறிவித்தார்கள்.

நானே நல்ல மேய்ப்பன் பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும் [யோவான் 10 :14]

நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன் ஆடுகளுக்காக [மனிதனுக்காக] என் ஜீவனையும் கொடுக்கிறேன் [யோவான் 10:15]

இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் [ஜலப்பிரளயத்தின்போது மரித்து பரதீசில் ஞாயதீர்ப்பிற்கென்று காவலில் உள்ள ஆவிகள்] எனக்கு உண்டு அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும் அவைகள் என் சத்தத்துக்குச் செவிக் கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் [யோவான் 10:16]

நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக்கொடுக்கிற படியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார் [யேவான் 10:17]

ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான் நானே அதை கொடுக்கிறேன், அதை கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு, இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார் [யோவான் 10 :18]

பார்த்தீர்களா இந்த வேத வசனங்களை, தன் ஜீவனை தன் சரீரத்தை விட்டு பிரித்து பரதீசிக்குபோய் ஆவிக ளுக்கு பிரசங்கித்து மீண்டும் தன் சுய சரீரத்தில் வந்துஉயிர்த்தெழுந்தார், ஆனால் சித்தர்கள் ஒரு சரீரத்தை விட்டு வேறு சரீரத்திற்குள் போய் திரும்பிதன் சொந்த சரீரத்திற்குள் வரும் கூடுவிட்டு கூடுபாயும் சித்துவேலையல்ல இது. அப்படி சித்துசெய்யும் சித்தர்களின் சரீரத்தை யாரும் தொடாமலும், இடம் மாற்றாமலும், போர்வையால் மூடாமலும், பார்த்துக் கொள்ளவேண்டும், இல்லையென்றால் வேறுகூட்டிற்கு சென்றவர் திரும்பி தன் சரீரத்திற்குள் வரவே முடியாது, இது தான் கூடுவிட்டு கூடு பாய்தல் என்று சொல்வார்கள் நானும் ஒரு சித்தரின் வழிவந்த சித்தரை பார்திருக்கிறேன். ஆனால் இயேசப்பாவின் மரணமும், உயிர்த்தெழுதலும்,தேவ ரகசியம், மனிதகுலத்தின் பாவத்தின் பரிகாரம், பிதாவாகிய தேவனின் முன்குறித்தல், ஆமாம் இயேசப்பாவை கொடுமையான எலும்புகள் பதிக்கப்பட்ட நான்கடி நீளமுள்ள வாரினால் இரவெல்லாம் ரோம போர்சேவகரால் அடிக்கப்பட்டு, சரீரம் கிழிக்கப்பட்டு, பாரமான சிலுவையில் கை, கால்களில் ஆனிகளால் கடாவப்பட்டு, விலாவிலே ஈட்டியினால் குத்தப்பட்டு, மரித்துவிட்டார் என்று ரோமபோர் சேவகர்களால் உருதிசெய்யப்பட்ட பிறகு வெல்லை போலத்தில் ஊரவைத்த மூண்று சேலை களால் சுற்றப்பட்டு, கல்லரை குகையிலே யூத முரமையின்படி அடக்கம் செய்யப்பட்டவர்தான் நம் பாவங்களுக்காக நமக்காக பலியான தேவகுமாரன், கடமைகளைமுடித்த பிறகு தான் சொன்னபடி உயிர்த்தெழுந்தார். இவர்தான் நம் மெய்யான தெய்வம் மரணமில்லாத ஜீவாதிபதி, இதோ வேதவசனங்கள்.

பின்பு அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள் சமீபித்தபோது அவர் எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைதிருப்பி [லூக்கா 9 : 51]

தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார், அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள் [லூக்கா 9 : 52]

அவர் தேவதூதர்களுக்கு கட்டளையிடும் தேவனாகவே இருந்தும், அவர் பிதாவின் சித்தமாகிய தாழ்மையின் அடையாளமான சிலுவைபாடுகளை நோக்கி நடந்தார்,

பிதாவே உமக்கு சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிசெய்யும்: ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் [லூக்கா 22: 42]

அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரை பலப்படுத்தினான் [லூக்கா 22:43]

பிதாவிற்கு கீழ்படிதல் என்றால் என்னவென்று கீழ்படியாமல் வீழ்ந்துபோன தேவதூதுவனாகிய சாத்தானுக்கு கற்றுத்தரவும், அவனால் பாவத்திற்கு அடிமைக்கப்பட்டிருந்த நம்மை அவனிடமிருந்து மீட்கபடுவதற்கு, கோரமாக தம்சரீரம் பீய்க்கப்படவும், தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தபோது அவர் வாய்திரவாத ஆட்டுக்குட்டியாக இருந்தார், நம் பாவங் கள் அவர்மேல் சுமத்தப் பட்டதினால் பவத்தைபாராத சுத்தகண்களை உடைய பிதா இமைப்பொழுது முகத்தை திருப்பிக் கொண்டதால் தாய்முகம் மறைக்கப்பட்ட குழந்தை கதறுவதுப்போல இயேசப்பா கதறினார்.

உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலேஉலகம்இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார் [யோவான் 3:17]

இயேசு அவர்களை நோக்கி நான் என்னை அனுப்பின வருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. [யோவான் 4: 34]

ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு ஏலி ஏலி லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார் அதற்கு என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம் [மத்தேயு 27 : 46]

அவருக்குப்பக்கத்தில் வலதுபுரமிருந்த சிலுவையில், அறையப்பட்ட ஒருகல்வன் காலமெல்லாம் செய்த அக்கிரமத்திற்கு தேவமண்ணிப்பும், ரட்சிப்பும், தன் அருகாமையில் இருப்பதை ஆவியிலே உணர்ந்து விட்டான்,மண்ணிக்கிரதேவனிடம் பாவ மண்ணிப் பையும், இராஜாவோடவே பரதேசம்போகும் மகா பாக்கியமும் பெற்றான்.

நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்: நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம் அவரோ தகாத்தொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனை கடிந்துகொண்டு [லூக்கா 23 : 41]

இயேசுவை நோக்கி ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். [லூக்கா 23 : 42]

இயேசு அவனை நோக்கி இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதேசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்றார் [லூக்கா 23: 43]

அவர் சரீரத்தை விட்டு ஆவியிலே பரதேசத்திற்கு போகவேண்டியதை முன்கூட்டிய பிதாவின் கட்டளையாக பெற்றிருந்தார்அதன்படியே

அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் [1 பேதுரு 4: 19]

அந்த ஆவிகள் பூர்வத்தில் நோவாபேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது கீழ்படியாமற் போனவைகள் அந்தப்பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள் [1 பேதுரு 4 : 20]

அவர் சிலுவைக்கு ஒப்புக்கொடுக்கப்படபோவதை தம் சீசர்களுக்கு முன்னறிவித்தபோதே அவர் உயிர்த்தெழு வதை பற்றியும் சொல்லியிருந்தார்.

ஆகிலும் நான் உயிர்த்தெழுந்தபின்பு உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார் [மத்தேயு 26:32]

அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார் [லூக்கா 24:6]

இவைகளைக்குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக் கையில் இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார் [லூக்கா 24 :36]

அவர்கள் கலங்கி பயந்து ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள் [லூக்கா 24: 37] அவர், அவர்களைநோக்கி நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிற தென்ன [லூக்கா 24:38]

நான் தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்கலையும் பாருங்கள் என்னைத் தொட்டுப்பாருங்கள் நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி [லூக்கா 24 : 39]

தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்கு காண்பித்தார் [லூக்கா 24:40]

பின்பு தோமாவை நோக்கி நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப்பார் உன் கையை நீட்டி என் விலாவிலேபோடு அவ்விசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார் [யோவான் 20:27]

அபொழுது இயேசு வந்து அப்பத்தையும், மீனையும் எடுத்து அவர்களுக்கு கொடுத்தார் [யோவான் 21:13]

இயேசு மரித்தோரிலிருந்தெழுந்தபின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம் [யோவான் 21:14]

அவர் உயிர்த்தெழுந்தபின் எப்போதும் போல தன் சொந்த சரீரத்திலேயே இருந்தார் என்பதற்கு அவரை தொட்டுப்பார்த்து என் தேவனே, என் ஆண்டவனே என்று அவர்பாதத்தில் விழுந்து உலகுக்கு காட்டியது தோமாவின் சாட்சி. இப்போதும் கோடான கோடி சாட்சிகள் உன்டு.

மாய்மாலமான யூத குருமார்களை அவர் திட்டி புத்திசொன்னதால், கோவமடைந்த அவர்களால் பொய்குற்றம் சாட்டப்பட்டு ரோமானிய கவர்னர் பிலாத்து என்பவனால் சிலுவையில் நியாயமே இல்லாமல் கொல்லப்பட்ட ஒரு நல்ல பரிசுத்தமான மனிதர் தான் இயேசு,அவர் உலகின் முதல் புரட்சியா ளன் என்றும் சில பகுத்தறிவாளர்கள் சொல்வார்கள்.

அப்படியல்ல இயேசப்பாவின் சிலுவைபாடுகள் உலகத்தோற்றத்திற்கு முன்பே பிதாவாகிய தேவனால் முன்குறிக்கப்பட்டது,

பரலோக ராஜ்ஜியத்தில் ஆராதனை பர்வதத்திலிருந்து தேவனுக்கு ஆராதனை செய்துவந்த ஆராதனை தூதுவன், பிதாவாகிய தேவனுக்கு பிடிக்காத துர்நாற்ற மாகிய மேட்டிமையை தனக்குள் உண்டாக்கியதால் தேவனால் தல்லப்பட்ட ஆராதனை தூதுவனாலும் அவன் சேனைகளாலும், தலைமுறை தலைமுறையாக பாவசேற்றிற்குள் புதைந்துகிடக்கும் மனித இனத்தை, பிதாவாகிய யகோவா தேவன் நேசிக்கும் மனிதனை, பரலோக ஆராதனை பர்வதத்தில் கொண்டுவந்து சேர்க்கவே பிதாவானவரால் முன்குறிக்கப்பட்டதே இயேசுவின் சிலுவைப்பாடுகள். இது தெய்வ அன்பின் ஆழ்ந்த ரகசியம் மனித அறிவிற் கெட்டாத பரலோக ராஜ்ஜியத்தின் மகாரகசியம். இது கர்த்தரின் அன்பிலும், இயேசப்பாவின் நடத்துதலிலும், வாழ்பவனுக்கு ஒவ்வொருநாளின் அனுபவம். இன்றும் தோமா தொட்டு பார்த்து உலகுக்கு தெரியப்படுத்தின மகிமையின் சரீர மாகவே தம்மை நோக்கி கூப்பிடுகின்ற யாவருக்கும் செவிகொடுக்கிற தகப்பனும், இருதயத்தில் சுத்தமுள்ள வர்கள் யாவருக்கும் காட்சிதரும் தேவனாகவே நம் இயேசப்பா இருக்கிறார்.

சிலசகோதரர்கள் இயேசுகிறிஸ்து ஏன் முப்பதுவயதில் பிரசங்கம் செய்யவந்தார் அவர் தேவகுமாரன் என்றால் சிறுபிராயத்தில் ஏன் பிரசங்கிக்கவில்லை என்று கேட்பவர்கள் மத்தியில் இயேசு தன் முப்பதுவயதுவரை இந்தியாவில் இமயமலையில் சித்தர்களோடு இருந்தார் என்று சொல்லும் நல்லவர்களும் உண்டு. இதற்கு பதிலாக வேதாகமம் சொல்கிறதை பார்ப்போம்,

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி [எண்ணாகமம் 4:1]

லேவியின் புத்திரருக்குள்ளே இருக்கிற கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில், [எண்ணாகமம் 4:2]

ஆசரிப்புக் கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க முப்பதுவயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி தொகையிடுவாயாக [எண்ணாகமம் 4 : 3] இதேப்போல் [எண்ணாகமம் 4 : 22,23,29 ,34,35,38,39, 42,43,46] ஆகிய இத்தனை வசனங்களில் கோத்திரப் பிதாக்களுக்கு கர்த்தரின் வேலையை செய்யவரும் இளைஞர்கள் கண்டிப்பாக முப்பதுவயது அடைந்தவர் களில் இருந்து ஐம்பது வயதுவரை இருக்கவேண்டு மென்பது, கர்த்தர் சொல்லி மோசேயினால் ஏற்படுத்தப் பட்ட நியாயப்பிரமாணம். அதாவது இஸ்ரவேலின் சட்டம், இதுவே இப்போதும் யூத சட்டம் எனவே கிறிஸ்துவும் தன் முப்பதாவது வயதில் கர்த்தரின் தேவாலயத்தில் தன் பிதாவிற்கடுத்த காரியங்களில் வந்து நின்று அதிகாரம் நிறைந்தவராக போதித்தார். இதுதான் உண்மை.

ஒருநாள் ஒரு காட்சியைகண்டேன், சாலை ஓரத்தில் ஒரு சகோதரி நெற்றியில் விபூதியும் குங்கும்மமும் சந்தன மென்று பொட்டுக்கள் வைத்திருந்தார் ஒருபெரிய கல்லின்மீது உடகார்ந்திருந்தார்கள் அவரின் அருகே மூன்று,நான்கு வயது மதிக்கதக்க சிறுமி. கிறிஸ்துவர் யாரோகொடுத்த ஒரு கைப்பிரதியை கையில் வைத்து தன் தாயிடம் அம்மா இது என்னம்மா என்று கேட்டதும், அந்த இந்து சகோகதரி இது, இயேசப்பாமா என்று செல்லமாக சொல்ல அந்த குழந்தை இயேசப்பாவா என்று அந்த காகிதத்தில் முத்தமிட்டபடி தன் குழலினும் இனிமையான மழலையில் சொல்ல இதைபார்த்துக் கொன்டிருந்த என் கண்கள் கலங்கியது. இந்த தாயின் உணர்வு தான் இயேசப்பாவை அறிந்தவர்களின் உண்மையான மனசாட்சியின் உணர்வு. இருதயத்தில் சுத்தமுள்ள பிராமணர்களிடம் இயேசப்பாவைபற்றிய சாட்சிகள் ஏராளமாக உண்டு. எனக்கே நிறையப்பேர் தெரியும், இயேசப்பா ஒரு மதம் சார்ந்த கடவுள் அல்ல, இறைவழி மார்கங்களுக்கு மதமென்ற பெயரைவைத் தவன் மதம் பிடித்தவனாக இருக்கலாம், நமது இயேசப்பாவோ மனித இனத்தின் இரட்சகர், இரட்சகர் என்றால் ரோம மொழியில் கிறிஸ்த்து என்று அர்த்தம், அவர் சாதி, மதம், மொழி எல்லாவற்றுக்கும் அப்பாற் பட்ட ஒரே இரட்சகர், மனிதகுல மீட்பர். பேசுகின்ற தெய்வம், நம் விண்ணப்பத்தை கேட்கும் தெய்வம், நம்மை பார்த்து தினம்ஒரு முறை பயப்படாதே, நான் உன் தேவன் என்று சொல்லும் தெய்வம் நம் இயேசப்பா, இயேசுவே ஜெபத்தைகேட்டு பதில் தரும் தெய்வம் என்று பிராமணர்களில் பட்டாச்சாரியர் ஒருவர் யூடியூபில் சொன்ன சாட்சியை கண்டு தேவனை மகிமைபடுத்தினேன். அவர்களெல்லாம் உண்மை பக்தியும், பரிசுத்த இருதயமும் உள்ளவர்கள், இவர்களுக் காகவே பக்தி வைராக்கியம் உள்ளவர்களை நான் தெரிந்து கொள்கிறேன், என்று கர்த்தர் வேதாகமத்தில் சொல்லி வைத்திருக்கிறார். எத்தனையோ பிராமண குடும்பங்களை தெரிந்து தனக்கென்று வேறுபிரித்து ஊழியப்பாதையில் வழிநடத்தியும் வருகிறார்.

ஆனால் அவர் தன் குமாரனாகிய நம் இயேசப்பாவை அனுப்புவார், அவர் வந்து சேனைகளின் கர்த்தரை தெரிந்துகொள்ளும் அறிவை நமக்கு தந்து, தம்மை வெளிப்படுத்தி, நாம் எதற்காக பூமியில் படைக்கப் பட்டோம், எங்கிருந்து எப்படி பிறந்தோம்,மரித்து எங்கே போக கூடாது, எங்கே போக வேண்டும்,என்று தெறிவிப்பார், என்று இயேசப்பா பூமிக்கு மனிதராக வருவதற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னமே கர்த்தர் தமக்கு பிரியமான பிள்ளைகளாகிய தீர்க்கதரிசிகளிடம் சொல்லியிருக்கின்றார்.

பிதாவே வேளைவந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர் மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும் படிக்கு நீர் உம்மு டைய குமாரனை மகிமைப்படுத்தும் [யோவான் 17:2]

பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன் [யோவான் 17:4]

பிதாவே உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்போழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும் [யோவான் 17:5]

நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தி னேன் அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள் அவர்களை எனக்குத் தந்தீர் அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள் [யோவான் 17:6]

நீர் எனக்கு தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள் [யோவான் 17:7]

நீர் எனக்காக கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள் [யோவான் 17:8]

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் [யோவான் 17:21]

பிதாவே உலகத்தோற்றத்துக்குமுன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால் நீர் எனக்குத் தந்த என்னுடையமகிமையை நீர் எனக்கு தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன் [யோவான்17:24]

அவரோடு நாம் இருந்தால் அவர் பேசுகிறதை கேட்டு ஆபத்திற்கும்,அழுகைக்கும்,அசுத்தத்திற்கும், அலகைக்கும், தப்பிப்பிழைக்கலாம், ஆமாம் இதுமத போதனையல்ல இது பாவியாகிய நான் என் வாழ்வில் அனுபவித்த, அனுபவிக்கின்ற உண்மை.

அதற்கு இயேசு நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் [யோவான்14:6]

ஆமாம் பரலோக ஆராதனை கூடத்தின் பிரதான ஆசாரியராக பிதாவாகிய தேவனே தம் குமாரருக்கு முடிசூட்டியதால், பிரதான ஆசாரியரின் வழியாகத்தான் யாராக இருந்தாலும் பரலோகத்தின் பிதாவிடத்திற்கு வரமுடியும்.

இதெல்லாம்என்ன மனிதன்பிறக்கிறான், வளர்கிறான் இனவிருத்தி செய்கின்றான், பின் சாகின்றான் அவ்வளவு தான் என்று நம் இருதயத்தில் ஒரு கருத்து பிறக்கலாம், அந்த நேரத்தில் இப்படி யோசித்துப் பார்ப்போமானால் சத்தியம் விலங்கும்.

மாயை,மாயை,எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்கிறான்[பிரசங்கி 1 : 2]

சூரியனுக்கு கீழே மனுஷன் படுகிற எல்லா பிரயாசத்தினாலும் அவனுக்கு பலன் என்ன [பிரசங்கி 1: 3]

ஒருசந்ததி போகிறது, மறு சந்ததிவருகிறது பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது[பிரசங்கி 1: 4]

இந்த வசனங்களை ஆழ்ந்து சிந்தித்தோமானால் மனிதர்களின் எல்லா கிரியைகளும், மனிதனின் ஒவ்வொரு பருவத்தில் அவன்செய்யும் காரியங்களும் இந்த சூரியனுக்குகீழே மாயாயாகத்தான் மறைந்து போகிறது. ஆமாம் மறைந்து மாயமாய் எங்கேபோகிறது இதோ வசனம்.

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்க்ககண்டேன், அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது: அப்பொழுது அந்தப் புஸ்தகதகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் [வெளிப்படுத்தல் 20:12] சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கன் கிரியைகளின் படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்[வெளிப்ப 20: 13]

மனிதன் தன் ஒவ்வொரு பருவமும் அவன்செய்யும் கிரியைகளோடு மாயமாய் எங்கே போகிறதென்று தெரிகிறதா, சூரியனுக்குகீழே மயையாக மாறுவதெல்லாம், இல்லாமல் போகும்காரியமல்ல எல்லாம் நிஜம்,எல்லாம் சத்தியம்.எல்லாவற்றிற்கும் உருவமுண்டு. எந்த காரியங்களும் நிழலல்ல நிஜம்.

காரணமில்லாமல் எந்த காரியமும் இல்லை, காரண மில்லாமல் எந்த உற்பத்தியும் இல்லை, நமக்கு உபயோ கப்படாத எந்த ஒருபொருளையும் உற்பத்தி செய்யவும் மாட்டோம்,எந்த ஒரு பொருளையும் நாம் விலைக் கொடுத்து வாங்கி வீட்டிலே வைக்கவும் மாட்டோம் அல்லவா, அதைப்போலத்தான் சகல சிருஷ்டிப்பின் ரகசியமும் இருக்கின்றது.

நாம் நம்மை படைத்தவருக்கு அவ்வளவு முக்கியமான பாத்திரமாக இருப்பதினால் தான் நமக்கு இந்த பூமியையும் இதில் உள்ளவைகளையும் படைத்து நமக்கும் நம் சந்ததியாருக்கும் கொடுத்திருக்கின்றார்,

தன் சொந்த குமாரனையும் நமக்கு கொடுத்தாரே, என்பதை உணரமுடியும், அப்போது சேனைகளின் கர்த்தரிடம் பக்தியும் பயமும் நமக்குள் வரும், அவரிடம் வாருங்கள், அவர் உங்களிடம் வருவார், இது சத்தியம், சத்தியம் என்ற வார்தை உண்மையை உறுதிப்படுத்தும் வார்த்தைதான்.

சகோதரனே நான் மதப்போதகனும் அல்ல சொல்லிக்கொடுக்க பரிசுத்தவானும் அல்ல, நான் சாதாரண ஒரு பாவிதான், என் வாலிப வயதில் இந்து பக்தி வைராக்கியமாக எல்லாவற்றையும் படித்ததும், முப்பத்து முக்கோடி தேவர்களில் ஒன்றையாகிலும் என் கண்கள் காணாதா என்று மலைகளில் சுற்றிதிரிந்ததும் உண்டு. எதிலும் எனக்கு விடியலுமில்லை,

இதயசமாதா னமும் இல்லை,இறைவனுக்கு பயப்படவேண்டும் என்று மாத்திரம் உணர்ந்தேன், யார் இறைவனென்று தான் உணரமுடியவில்லை, காவியங்கள் பழி வாங்குத லையும்,ஒருவனுக்கு ஒருத்தியென்று வாழவேண்டுமென்றமனித ஒழுக்கத்தையும், காப்பியங்கள் மனிதனின் வாழ்க்கை நிலையையும் வரலாறுகள் மனித இனங்களின் நிகழ்வுகளையும், மனிதனை மனிதன் சொந்தங்களென்று தெரிந்தே அழிக்கும் கொடூரத்தை வீரமென்றும், யுத்த தர்மமென்றும், புகழ்வதையுமேதவிர, வேறொன்றையும் காண முடியவில்லை, இறைவனை என்னால் உணர முடிய வில்லை, நல்ல குணங்களையே மனிதனுக்கு போதனை செய்தலின் அவசியத்தை தங்கள் போதனைகளில் முழுமையாக வைத்து போதித்த நல்ல பரிசுத்தவாண்கள், இவர்கள் வணக்கத்திற்குறியவர்கள், என்பதை வெளிப் படுத்தியதே தவிர, இறைவன் யாரென்று நான் தெரிந் துக்கொள்ள அவர்களாலும் சொல்லமுடியவில்லை.. கன்னியப்ப சுவாமிகளிடம் குரு தீட்சதை பெற்றேன், தியானமும் பிராணயாம பயிற்சியும் நம் சரீரத்திற்கு மாத்திரமே என்று உணர்ந்தேன், ஆயிரம்வருடம் உயிருடன் ஜீவ சமாதியில் இருப்பதால் மற்றவர்களுக்கு என்னலாபம், நமக்குத்தான் என்னலாபம் என்று கேட்டதால் தகுதிஇல்லாத சீடனாக வெளியே அனுப்ப பட்டேன், ரிக் வேதம், படித்த சுத்த மனதுடைய பிராமணர்களிடமிருந்து ரிக்வேதம் உருவமில்லாத இறைவனைத்தான் காட்டுகிறது என்றும், அவரைத் தான் கர்த்தரென்று சொல்கின்றார்கள் என்ற போதனையும் பெற்றேன், அதுமறைக்கப்பட்ட உண்மைகிவிட்டதால் அதை வெளிப்படையாக பேசமுடிவதில்லை என்ற சொந்த கருத்தையும் சொன்னார்கள். இறைவன்மீது பக்தியாக சுற்றிதிரிந்த நான் ஜென்ம சுபாவத்தாலும் ஆட்டிப் படைக்கப் பட்டிருந்தேன் அதனால் நீசனாக சுற்றித்திரிந்தேன், மேலும் சுயதொழிலில் நஷ்டத்தை என் பெற்றோர் களுக்கு நான் ஏற்படுத்தினேன், வேலை யில்லா வேதனையில் தாய், தகப்பன், பார்வைக்கு தேவையில் லாதவனாக காணப்பட்டேன், ஒருவேளை மட்டும் சாப்பிட்டால் போதுமென்றிருந்தேன், ஒருநாள் இரவு என் தகப்பன் என்னை வெளியே தள்ளி கதவை சாத்தினார், ஒருவேளை சாப்பாடும் அன்று இல்லாமல் அழுதுக்கொண்டே வீட்டு படியருகே படுத்துக்கொண்டு வழக்கம்போல ஸ்ரீராம ஜெயம் சொல்லியபடி அழுதுக் கொண்டிருந்தேன்,எப்படியோ தூங்கிவிட்டேன். என் விலாவைத்தட்டி எழுப்புவதுபோல இருந்தது திடுக்கிட்டு எழுந்தேன் யாரும்இல்லை, தூக்கம்கலைந்து மீண்டும் அழுகை வந்தது, மீண்டும் விலாவிலே தட்டப் பட்டேன், அவ்வளவுத்தான் தெரியும் எழுந்து முழங்கால் படியிட்டு பரமண்டலங்களில் இருக்கிற எங்கள்பிதாவே என்று சொல்ல ஆரம்பித்ததும் சத்தமாக கதறி அழுதேன் எதிர்வீட்டு கிறிஸ்த்தவ தாயும் தகப்பனும், சகோதரியும், நான் அவர்களை கேலிசெய்த என் சிறுபிராய நாட்களில் எனக்காக அவர்கள் ஜெபிப்பதை அறிந்திருக்கிறேன், பலவருடங்கள் கழித்து அன்று அந்தவீட்டிலிருந்துத்தான் இயேசப்பா வந்து என் அருகே நிற்பதாக உணர்ந்தேன், அழுதேன், கதறினேன் வீட்டுகதவு திறக்கப்படவில்லை, ஆனால் அன்று எனக்காக இயேசப்பாவின் பரலோக கதவு திறந்தது, இதயம் லேசாக மாறியது, காலையிலே சென்னை ஆர்மீனியன் தெருவில் உள்ள அந்தோனியார் கோவிலுக்கு சென்று கதறினேன். ஒரேவாரத்தில் இண்டர்வியூவும் வந்தது பதினைந்து நாளைக்குள் வேலைக்கும் போய்விட்டேன். என்னை பெற்றுக் கொண்டவர்களைப் பார்க்கிலும், என்னை கருவிலி ருந்து உயிர்தந்து குறையில்லாமல் பிறக்கச் செய்து அவர்களுக்கு கொடுத்தாரே அவரே அன்பில் பெரியவர் என்று தெரிந்துகொண்டேன். தாய், தந்தை, உடன்பிரந் தவர்கள் எந்த மனித சொந்தங்களை விட அதிகமாய் நேசிக்கப்படதக்கவர் என்று உணர்ந்தேன், கிறிஸ்த்த வர்களிடம் கேள்விகேட்டு,அவர்களை மடக்கவே பரிசுத்த வேதாகமத்தையும் படித்துவைத்திருந்தேன், எத்தனையோ கிறிஸ்த்தவர்களை என் வேதாகம கேள்வியால் கலங்க வைத்திருக்கிறேன், ஒரே இரவில் இயேசப்பாவால் இரட்சிக்கப்பட்டேன், வேதாகமத்தை படிக்கும்போது கண்ணீர் தானாக வடிந்துகொண்டே இருக்கும், ஆனந்த கண்ணீரை அப்போதுத்தான் ருசிபார்த்தேன் ஆமாம், கிறிஸ்த்தவர்களிடம் நான் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் இயேசப்பா விளக்கமாக, ரகசியங்களையெல்லாம் சொல்லித்தந்தார், அது சொல்லிமுடியாத உணர்வு அபூர்வமான ஆனந்தம். தான் பெற்ற உண்மை சந்தோஷத்தை எல்லோரும் பெறவேண்டும் என்பதே உண்மை கிறிஸ்த்துவத்தின் ஆழ்ந்த தத்துவம், ஆமாம், என் மனைவி திருமணமான எட்டாம் மாதத்தில் தலையில் நீர்கட்டியினால் கோமா நிலையடைந்து மரித்துவிட்டதாக மருத்துவர்கள் முடிவெடுத்து வெளியில் கொண்டு வந்துவிட்டார்கள், நான் இயேசப்பாவிடம் அழுதேன் அதிசயமாக என் மனைவிக்கு உயிர்தந்து இன்றுவறை நல்ல ஆரோக் கியத்துடன் காத்துவருகிறார், ஒரு தடவை எங்கள் குடும்பபிரச்சனையின் போது அதிகாலை நான்குமணி என் மனைவியை அடித்தேன் அவள் கதறி அழுதாள் அவள் மிகவும் அப்பாவி என்குடும்பதினரால் ஏற்பட்ட வேதனை,என் மனைவியின் தகப்பன் ஏன் என் மகளை இப்படி அடிக்கிறாய் என்று கேட்கவில்லை பார்த்து விட்டு உள்ளேபோய் விட்டார். ஆனால் **என்ன செய்துகொண்டிருக்கிறாய் கீழ்ப்படி** என்று இயேசப்பா என் இடதுபக்க காது கேட்க என்னை அதட்டினார், என் கண்கள் திறக்கப்பட்டது என்மனைவி கதறிஅழுவது என் கண்களுக்கு தெரிந்தது என்மனைவியை ஒருபக் கமும் என்மகனை ஒருபக்கமும் அணைத்துக்கொண்டு அழுதேன். இப்படி என்குடும்பத்தை காப்பாற்றினார், ஒருநாள் நானும் என்மகனும் பைக்கில் போய்க்கொண்டி ருந்தோம் அப்போது **போ வேகமாக** என்று என்னை அதட்டி தாறுமாறாக எனக்குபின் வந்த வேனிலிருந்து என்னையும் என் மகனையும் காப்பாற்றினார்**, போ இங்கிருந்து** என்று தவரான ஆட்களிடமிருந்தும் என்னை துரத்தியிருக்கிறார், **சோம்பேரியே வேதாகமத் தை எடுத்துக்கொண்டு போய் கொடு** என்று என்னை அதட்டி மருத்துவர்கள் கைவிட்ட இந்து சகோதரி விஜயா என்ற நான்காம் நிலை கேன்சர் பேஷன்டை மருத்துவர்கள் சொந்தங்கள் ஆச்சரியப்படும்படி முழுமையான சுகத்தை கொடுத்தார் என்னை எத்தனையோ முறை இயேசப்பா அதட்டி வழிநடத்தி இருக்கிறார். பாவத்திலிருந்து விடுதலை, தீரா கேன்சரிலிருந்து விடுதலை, தீராவியாதியிலிருந்து விடுதலை,பொல்லாத மனிதர்களிடமிருந்து விடுதலை, குடியிலிருந்து விடுதலை, கடன் பாரத்திலிருந்து விடுதலை,ஓயாத காம இச்சையிலிருந்து விடுதலை, சுயப்புணர்ச்சி பாவத்திலிருந்து விடுதலை, ரகசிய பாவத்திலிருந்தும் விடுதலை , குடும்ப சாபங்களில் இருந்து விடுதலை, கஷ்டத்திலிருந்தும் விடுதலை, நஷ்டத்திலிருந்தும் விடுதலை, வருமையிலிருந்தும் விடுதலை, வேலையில்லா கொடுமையிலிருந்தும் விடுதலை, செய்வினைகளிலிருது விடுதலை, பேயிலிருந்து விடுதலை, பொறா மையிலிருந்தும் விடுதலை, பகையிலிருந்தும்விடுதலை, ஆமாம் இவைகளிலெல்லாம் அடிமைகளாக சாத்தானால் நாம்

கட்டப்பட்டிருப்பதாலே, குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் என்று சத்தியவேதம். சொல்வது சத்தியமாயிருக்கின்றது.

இதை மரணத்தின் விளிம்பில் நின்று கதறியழுது இயேசப்பாவை கூப்பிட்டு விடுதலை பெற்ற மனிதர் களின் சாட்சிகள் கோடான கோடி இருக்கின்றது. போதகரும் தேவையில்லை, எந்த சடங்குகளும் தேவை யில்லை, மதமும் தேவையில்லை, மதமாற்றமும் தேவை யில்லை. கிறிஸ்த்துவர்கள் எல்லாரும் இப்படியே சொல்கிறார்களே, என்று உங்கள் மனசு சொல்லலாம், ஆமாம் அதுதான் உண்மை. தேவன் தம் ஒரே பேரான குமாரனை மனுஷனாக அனுப்பியதின் நோக்கமே மனித சமுதாய விடுதலைக்குதானே, மதமோ மனிதன் உண்டாக்கியது.

இன்றும் எனக்குள் ஒரு கேள்வி இருக்கிறது, ஆபாச படங்கள், நிர்வானபட புத்தகங்கள், அந்த நாட்களில் நடைபாதையில் விற்கப்பட்டது, இன்று நம் குடும்ப உருப்பினர்கள் ஒவ்வொருவர் கைகளில் இருக்கும் ஆன்ராய்டு செல் போன்களில் எல்லாவிதமான அசுத்தங் களும்,மனிதனை சோம்பேரிகளாக்கும் வீடியோக்களும், பெண்களின் சுபாவத்தை மறந்து பாவகாரியத்தில் இழுத் துப்போடும் சைக்கோக்களின் வெறியாட்டம் நிறைந்த, இன்டர்நெட் தொடர்புகளை பணம்கொடுத்து நம் பிள்ளைகளுக்கு பெருமையாக வாங்கிகொடுக்கின் றோம்.மாதாமாதம் பணம்கொடுத்து ரீசார்ஜும் செய்து கொடுக்கிறோம், ஆனால் நாமோ நம்மையும், நம் சந்ததிகளையும் பரிசுத்தமாக காப்பாற்றி, தீமையை விட்டு விலகி நல்லவர்களாகவும், தொல்லைகளில்லாத சமாதான வாழ்க்கையை பெற்றவர்களாகவும், ஆசீர் வதிக்கப்பட்ட சந்ததிகளை உடையவர்களாகவும், வல்லமை மிகுந்த இயேசப்பாவின் ஜீவனுள்ள வார்த்தைகளையும், அவர்தந்த பரிசுத்தவேதாகமத் தையும் காலாகாலமாக ஏன் வெறுக்கிறோமென்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் எதிர்க்கிறார்கள், தங்கள் கலாச்சாரங்கள் மாற்றப்பட்டுபோகும் என்று பயப்படுகிறார்கள், தங்கள்மத அடையாளங்கள் மறைந்துபோய்விடுமென்று பயப்படுக்றார்கள, மத அடையாளங்களைக்காட்டிலும் நித்தியஜீவன் பெரிய தல்லவா, நாம் பிறந்ததிலிருந்து நம்மை தாங்கி நடத்தும் நம் சரீரஅவையங்கள் அழிவைவிட்டு அழியாமையை தரித்துக்கொள்ளவேண்டாமா, கலாச்சாரம் நம் சரீரத்தோடு சம்மந்தப்பட்டது அது மாற்றப்பட தேவையில்லை, கிறிஸ்துவின் வேத வார்த்தைகள் நம் ஆத்மாவின் நித்திய மரணமில்லா வாழ்வு சம்மந்தப் பட்டது, அன்று ஆசையே எல்லா தீமைக்கும் காரணம் ஆதலால் ஆசையை அறவே ஒழித்துவிடுங்கள் என்று இளவரசனாக இருந்து தன்னை துரவியாக்கிக்கொண்ட மகா கௌதம புத்த பிரான் சொன்னதையும் எதிர்த்தார்கள், அவரையே சிலையாக நிறுத்தி சடங்குகளை ஏற்படுத்தினார்கள், மகாயாணம் ஹீனயாணமென்று பிறித்துவிட்டார்கள். எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்து உயிர்களை கொல்லாதே என்று திகம்பரனாக தன்னை மாற்றிக் கொன்ட இளவரசன் மகாவீரனை கல்லெரிந்து துன்பப் படுத்தினார்கள், உன்னை நீ நேசிக்கிறதுபோல பிறனை நேசி, உன்னை துன்படுத்து கிறவர்களுக்காக இறைவனிடம் வேண்டிக்கொள் ஆவியிலே எளிமையுள்ளவனாக இரு என்று போதித்த இயேசப்பாவையும் வெறுக்கிறார்கள். நல்லவைகளை எதிர்க்கும் நாம் எந்த ஆவியை உடையவர்களாக இருக்கிறோம். நிச்சயம் நல்ல ஆவியை உடையவர்கள் நல்லவைகளை எதிர்க்கமாட்டார்கள். என்று நமக்கே தெரிந்திருக்கிறதே.

உலகம் முழுவதையும் ஆட்சிசெய்ய புறப்பட்டான் இரத்தவெறிபிடித்த அலெக்ஸ்சாண்டர், உலகமெங்கும் அவன் கொண்று குவித்த மக்கள் எத்தனையோ கோடி, இவனைஎதிர்த்து நாம் ஒருவரும் பேசவில்லை, மாறாக மாவீரனென்று புகழ்ந்துகொண்டிருக்கிறோம், அறுபது லட்சம் மக்களையும், இருபத்தெட்டுலட்சம் குழந்தை களையும் இரண்டாம் உலகப்போரில் கொண்று குவித்த ஹிட்லர் என்ற ஒரு சைக்கோவை, நாம் யாரும் எதிர்த் துப்பேசவில்லை, மாறாக ஹிட்லர் தி கிரேட் என்றும் புகழ்கின்ற கேவலமான சிந்தனையுடைய கொடூரமான ஆவியை உடைய மனிதர்கள் வாழும் இந்த உலகத்தில், இறைவனே நேரில்வந்து நின்று காட்சிதந்து நல்லதை போதித்தால், அந்த இடத்தை டூரிஸ்ட்பிலேசாக மாற்றி பணம் சம்பாதிப்பார்கள், வானத்திற்கும் பூமிக்கும் உயரமாக கர்த்தர் வந்து நின்று நல்லவைகளை போதித்தாலும், அதை வரலாராக மாற்றி வானலாவ ஒரு சிலையை நிறுத்தி பிரம்மாண் டமான கோவில் கட்டி பிழைப்பை தேடிக் கொள்வார் கள், பின் சந்ததிகள் இந்தசிலைத்தான் இறைவன் என்று ஏதாவது பெயர் வைத்து அழைத்து விடுவார்கள். அதனாலேயே மனிதன் மாம்சத்திலும் இரத்தத்திலும், இருப்பதினால் கர்த்தர் மாம்சத்திலும் இரத்தத்திலும் மனிதராக வெளிப்பட்டார், அவரை அப்போதும் ஏற்க மனமில்லாமல் போனோம், ஆனால் இன்றும் அப்படியே இருக்க வாய்ப்பில்லை, உலகத்தில் எண்பது சதவிகிதம் பேர் கர்த்தரின் பள்ளைகளாக இரட்சிக்கப்பட்டு விடுதலை நாயகன் இயேசப்பாவால் விடுதலை அடைந்திருக்கி றார்கள்.

விடுதலை விடுதலை என்றால் யார் நம்மை அடிமையாக்கி இருக்கிறார்கள், என்று சிந்திக்க தோன்றும், நாம் ஒழுக்கமும், யாருக்கும் துரோகமும் செய்யாமல், எச்சரிக்கையான அறிவுடனும் வாழ்ந்தலே போதும், நமக்கு எந்த அடிமைத்தனமும் வராதென்று, தைரியமாக சொல்லமுடியுமா, அப்படியானால் நாம் மாத்திரம் நல்லவன் என்ற பெருமைக்கு அடிமையாகி விடுவோம், மற்றவர்களை அற்பமாக நிணைக்க தோன்றும் இதுவும் பெரியபாவம்தான்,. நிச்சயம் முடியாதென்று நமக்குத்தெரியும், பாட்டன், பூட்டன், அப்பன், கொடுத்த இரத்த ஜென்ம சுபாவம் நம்மை ஆட்டிப்படைக்கின்றதே, அதை உடலியலும், உயிரியலும் கண்டுபிடித்திருக்கிறதே.

மனிதர்களை விடுதலையாக்கவே, தேவன் தன் சொந்த குமாரனை பூமிக்கு அனுப்பினார் தேவன் யாரையெல்லாம் விடுதலையாக்க சித்தமாகிறாறோ அவர்களை தன்குமாரன் இயேசுமகா ராஜாவிடம் கொண்டு வந்து விடுகிறார், தன்னிடம் பிதா கொடுத்த ஒருவரையும் இயேசப்பா விட்டு விடுவதில்லை, இந்த உலகவாழ்வில் சமாதானத்தையும், மரணத்திற்கு பிறகு நரகத்திற்கு தப்புவித்து பேரானந்தமான பரலோகத்தில் யுகா யுகா மாக நித்திய நித்தியமாக பிதாவின் பாதத்தில் வாழ் வதற்கு கொண்டுபோய் விடுவதே தேவ குமாரரின் வருகையின் ரகசியமும், வாஞ்சையுமாக இருக்கின்றது.

அழுது கூப்பிடுவோர்கள் இயேசப்பாவை அப்போதே உணருவார்கள், பாவவிடுதலை அடைந்து இருதயத்தில் சமாதானத்தை உணருவார்கள்.

வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியள்ளவனாகவும் இருக்கும்படியாக- [2 தீமோத்தேயு 3:16]

நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தர்ராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம் [2 பேதுரு 1: 16]

இவர் என்னுடைய நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும், மகிமை யையும் பெற்றபோது [2 பேதுரு 1: 17]

அரோடகூட நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில் வானத்திலிருந்து பிறந்த அந்த சத்தத்தைக்கேட்டோம் [2 பேதுரு 1: 18]

ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும் நாங்கள் நோக்கிப் பார்த்ததும்,எங்கள் கைகளினாலே தொட்டது மாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம் [1 யோவான் 1: 1]

இயேசப்பா உங்களை பாதுகாப்பாராக, உங்களை ஆசீர்வதிப்பாராக.

பரிசுத்தவேதாகமம் பழையஏற்பாட்டு புத்தகம் இயேசப்பா பிறப்பதற்குமுன் 1500 BC, வருடங்களாக ராஜாக்களாலும், தீர்க்கதரிசிகளாலும், ஞானிகளாலும், தளபதிகளாலும், தேவனைதரிசித்தவர்களாலும், வரலாற்று ஆசிரியர்களாலும், வெவ்வேறு காலங்களில் பலஆன்டுகள் வித்தியாசத்தில் எழுவுதப்பட்டது 39 புத்தகங்கள், இயேசப்பா பிறந்தபிறகு 100AD களில் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் மீனவர்களாலும், மருத்து வராலும், ஞானியாலும், தீர்கதரிசியாலும் கண்களால் கண்டவர்கள், தேவன்பேசுவதை காதால் கேட்டவர் களாலும் எழுதப்பட்டது 27 புத்தகங்கள் மொத்தம் 66 புத்தகங்களின் ஆகமங்களே பரிசுத்தவேதாகமம், இவைகள், ஈபுரு, கிரேக்கு, அராமிக், என்ற மூன்று மூலபாஷைகளில், வெவ்வேறு நாட்டவரால் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்ட சத்திய பரிசுத்த வேதாகமம். படித்துப்பார்ப்பவர்களுக்கு யாரோ ஒரே மனிதர் எழுதிய புத்தகம் போல இருக்கும், ஆமாம் அது உண்மைத்தான் வானமும் பூமியும் தோன்றியதிலிருந்து, அதின் அழிவுவரை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நேரங்களில் தேவனுக்கு பிரியமானவர்களுக்கு தேவனின் பரிசுத்த ஆவியானவராள் வெளிப்படுத்தி எழுதிக்கொடுத்ததை புரிந்து கொள்ளமுடியும். ஜெர்மானியில் அச்சு எந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட நாளில் உலகத்தில் முதலில் அச்சடிக்கப் பட்ட புத்தகம் பரிசுத்த வேதாகமம், உலகத்தில் இன்று வரை அதிகமாக விற்பனையானதும், பரிசுத்த வேதாகமம் தான்,உலகத்தின் அனைத்து மொழிகளிலும் அச்சடிக்கப் பட்டது பரிசுத்த வேதாகமம் மட்டுமே, உலகில்உள்ள எல்லா புத்தகங்களிலும், கண்ணீரோடும் உடைந்த உள்ளத்தோடும் படிப்பவர்களிடம் பேசுகின்ற ஒரே அதிசய புத்தகம் பரிசுத்தவேதாகமம் மட்டுமே, உலகத்தில் பலருடைய எதிர்ப்பிற்கு ஆலாகியும் தடைசெய்யப்பட்டும் இன்னும் பெருகிக்கொண்டி ருக்கும் அதிசய அன்பு புத்தகமும் பரிசுத்தவேதாகமம்

எல்லா சந்தோஷங்களும் நிறைந்த மனிதருக்கு இது சாதாரண வேதபுத்தகம், வியாதியில் சாகப் போகிற வனுக்கு இது ஜீவன்தரும் புத்தகம், கடனில் மூழ்கி சாகப் போகிறவனுக்கு இது ஜீவ பொக்கிஷங்களை தரும் அதிசயபுத்தகம், பாவத்தினால் பாவிகளிடம் சிக்கி சாகப் போகிறவர்களுக்கு விடுதலைதருகின்ற இருபுறம் கருக்குள்ள பட்டயம், பரிதவிக்கும் திக்கற்ற குடும்பங் களை தகப்பனாகிய இயேசப்பாவின் வல்லமையான கரங்களுக்குள்ளாக கொண்டுபோய் சேர்க்கும் மாபெரும் மாயபுத்தகம், தெய்வத்தை நம்முடன் வந்து வாழச் செய்யும் அதிசய புத்தகம், உலக ஆசீர்வாதங்களை பொழிகின்ற மகிமையின்புத்தகம், பரிசுத்த வேதாகமத்தை வாங்கி படித்து அதன்படி இயேசப்பா விடம் பேசி நோயற்றவாழ்வும், சமாதாணமான வாழ்க்கையையும், பரிசுத்தமான வாழ்வையும், உலக ஐஸ்வரத்தையும் பெற்று ஆசீர்வாதமாக இருப்பீர்களாக ஆமென்.

மதத்தை கர்த்தர் உண்டாக்கவில்லை, அவர் உண்டாக் காதது எதுவும் ஜீவனில்லாதவைகள் தான், ஜீவனில் லாதது செத்ததாய் கருதப்படும், செத்தது புதைக்கப்பட வேண்டியது. மதங்களும் அப்படித்தான், கிறிஸ்தவன் என்றால் கிறிஸ்துவை உடையவன் என்று அர்தமே அல்லாமல், மதமல்ல அது கிறிஸ்துவுக்கும் தேவையில்லை, கிறிஸ்தவனுக்கும் தேவையில்லை, மனிதகுலத்தின் முழுமையானஅழியாத ஆன்மாவின் நித்திய பரலோக சந்தோஷமே கிறிஸ்துவின் நோக்க மும்,கிறிஸ்தவர்களின் நோக்கமுமாகும்.

கர்த்தர் உங்களையும், உங்கள்குடும்பத்தாரையும், நீங்கள் யார்யாருக்காக வேண்டுதல் செய்கின்றீர்களோ அவர்களையும்,உலகம் முழுக்க உள்ள திக்கற்ற பிள்ளை களையும், திக்கற்ற விதவைதாய்களையும், தன் கண்ணிமைப்போல காப்பாராக. ஆமென்

பரிசுத்த ஆவியானவர் சொல்லிக்கொடுத்து எதற்கும் தகுதியில்லாத என்னை இந்த புத்தகத்தை எழுத கருவியாக பயன்படுத்திய ஜீவாதிபதி இயேசப்பாவிற்கு நன்றி . பிதாவாகிய தேவனுக்கும், மகா பரிசுத்த தேவ ஆவியானவர்க்கும்,ஸ்துதி கனம் மகிமையையும் செலுத்துகிறேன் ஆமென்.

நன்றி இயேசப்பா